# முரசு முழங்குகிறது!

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 ... 1955
MADRAS



## ம.பொ. சிவஞானம்

இன்ப நிலையம்

# முரசு முழங்குகிறது!

ம.பொ. சிவஞானம்

இன்ப நிலையம்

மயிலாப்பூர் : : சென்னை—4.

முதற் பதிப்பு: ஜனவரி, 1955.
உரிமை பதிவு செய்யப்பெற்றது.

விலை ரூ. 1-4-0

செங்குந்த மித்திரன் அச்சகம், சென்னை-1.

# பதிப்புரை

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. அவர்களை ஆசிரியராகக்கொண்டு முன்னர் வெளிவந்த 'தமிழ் முரசு' பத்திரிகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில், அவ்வப்போதிருந்த சூழ்நிலைக்கேற்ப அவரால் எழுதப்பட்ட தலையங்கங்கள் சிலவற்றைத் தொகுத்து இந்நூல் வடிவில் வெளியிட்டிருக்கிறோம். ஆசிரியர் ம. பொ. சி. அவர்களின் கருத்துச் செறியும் எழுத்தாற்றலை தமிழகம் அறிந்ததே !

இந்நூல் தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளையும், கழகத்தின் வளர்ச்சியையும் அறிந்துகொள்வதற்குப் பயன்படுமென்று நம்புகின்றோம்.

இந்நூலை வெளியிடுவதற்கு அனுமதியளித்த திரு. ம. பொ. சி. அவர்களுக்கு எங்கள் நன்றி.

**சோம. சுவாமிநாதன்,**
இன்ப நிலையம்.

★

## ம. பொ. சி.

### எழுதிய நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| இலக்கிய செல்வம் | 2 | 8 |
| இலக்கியத்தின் எதிரிகள் | 2 | 12 |
| வள்ளுவர் வழி | | |
| வீரக் கண்ணகி | | |
| வீரபாண்டியக் கட்டபொம்மன் | 1 | 12 |
| கப்பலோட்டிய தமிழன் | 1 | 12 |
| வானொலியில் ம. பொ. சி. | 1 | 8 |
| தமிழன் குரல் | 1 | 4 |
| எங்கள் கவி பாரதி | 0 | 8 |
| சிலப்பதிகாரமும் தமிழரும் | 0 | 8 |
| சுதந்தரப் போரில் தமிழகம் | 0 | 8 |
| பிரிவினை வரலாறு | 0 | 8 |
| கயத்தாற்றில் கட்டபொம்மன் | 0 | 4 |
| தமிழரசா, திராவிடஸ்தானா ? | 0 | 4 |
| தமிழர் திருநாள் | 0 | 3 |
| பேச்சுக் கலை | 0 | 2 |
| தலைவர் ம. பொ. சி. (தொகுப்பு நூல்) | 1 | 12 |

★

# முரசொலி

முரசொலி தமிழ் இனத்திற்குப் புதிதல்ல. பண்டை நாளிலும் முரசு முழங்கியதுண்டு. எப்போது? மறவர் நாட்டை மாற்ருர் முற்றுகை யிட்டபோது, தமிழ் இனத்தின் வீரத்தைப் பிற இனத்தார் பழித்துப் பேசியபோது, மண்ணதிர விண்ணதிர மாற்ருர் மனமதிர முரசு முழங்கியது. தமிழ் முரசு வெளிப்பட்ட ஒவ்வொரு சமயத்திலும், அது வெற்றியன்றி வேருென்றைக் கண்டதில்லே. இது பண்டை நாளைய தமிழ் முரசின் வரலாறு.

இன்றும் தமிழகத்தில் 'முரசு' முழங்குகிறது. காரணம் என்ன? பிற இனத்தவரது நிலத்தை, பொருளே, அல்லது உரிமையை ஆக்கிரமிக்கவா?—அல்ல; தமிழ் இனத்தின் உரிமைகளேக் காக்க!

தமிழ்நாடு முற்றுகை யிடப்பட்டுள்ளது. இன்றல்ல, நேற்றல்ல; பல நூற்ருண்டுகளாக!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தமிழரின் அரியாசனத்தைப் பிடித்துக்கொண்டு ஆட்சி செலுத்துகின்றது. ஆங்கிலத் துருப்புக்கள் அந்த ஆட்சியை அரண் செய்து காக்கின்றன.

பொருளாதாரத் துறையில், ஏகாதிபத்தியச் சுரண்டல் ஆயுத பலத்தால்—ஆட்சியின் துணையால் தங்கு தடை

யின்றித் தாராளமாக நடைபெறுகின்றது. போதாக் குறைக்குப் பிற இனத்தவரின் மூலதனங்கள் வேறு தமிழ் நாட்டின் மீது படையெடுத்துத் தமிழரின் வாழ்வைப் பாழ் செய்கின்றன.

வளமான நிலமிருந்தும், பொன் கொழிக்கும் சுரங் கங்களிருந்தும் தமிழர் வாழ வகையின்றி உழைப்புக்கு அழைப்புத் தந்த இடமெல்லாம் ஓடி ஓடி அல்லற்படும் நிலைமை நம் உள்ளத்தை உறுத்துகின்றது.

மொழித் துறையிலும் முற்றுகை நிலைதான். இசை யரங்கில் தெலுங்கு; இறைவன் கோயிலில் வடமொழி; அரசியலில் ஆங்கிலம்! ஆம், பிற மொழிகள் தமிழ் நாட்டை முற்றுகையிட்டுத் தமிழ் மொழியை அடுப்பங் கரையளவில் சிறைப்படுத்திவிட்டது. தமிழன் தமிழை மறந்தான்; தமிழ்த் தெய்வமும் தமிழை மறந்தது.

தமிழ் நிலம்—தமிழினத்தவரின் தாயகம் பிற இனத்த வரால் முற்றுகையிடப்பட்டுள்ளது. தெற்கே திருவிதாங் கூரில்; வடக்கே திருப்பதியில். சென்னை நகர் மீதும் ஆதிக்க வாதிகளின் ஆசை அரும்பெடுத்திருக்கிறது. ஆகவே, தமிழ் நிலத்தின் மீது, தமிழ் நாட்டின் வளத்தின் மீது, தமிழ் மொழியின்மீது போடப்பட்டுள்ள முற்றுகையை முறியடிக்க வேண்டுமென்றே 'முரசு' முழங்குகிறது.

பிற இனத்தவரின் முற்றுகையை முறியடித்து, தமிழ் நாட்டில் தனியரசு கண்டு, அதுவும் முடியரசின்றி குடியர சாக, அந்தக் குடியரசும் சோஷலிச அரசாக இருக்க வேண்டும் என்பதற்காகவே மீண்டும் 'தமிழ் முரசு' முழங்குகிறது.

பண்டை நாளில் முடி மன்னரின் ஆணைப்படி முரசு

முழங்கியது. அந்த நிலை இன்றில்லை. இன்று மக்களின் சார்பாக, மக்களின் வாழ்வுக்காகவே 'முரசு' முழங்குகிறது.

தமிழ் மக்களே, அடங்கிக் கிடந்த நாள் அடிமாண்டு போகட்டும்! ஒடுங்கிக்கிடந்த நாள் ஒழிந்து தீரட்டும்! இனியேனும் முரசொலி கேட்டு முன்னணியில் சேருங்கள்!

'தமிழ் முரசு' 1-1-1947.

# ஆத்திரப் பொங்கல்

பொங்கல் திருநாள் உழவர் மக்களுக்கே சிறப்பாக உரியது. என்றாலும், இன்றைய நாளில் அப் பெருநாள் தமிழர் அனைவருக்கும் உரிய திருநாளாகக் கொண்டாடப் படுகின்றது. உழவுத் தொழில் மனிதன் உயிரோடு கலந்த ஒன்று. மனிதன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருளைத் தருவது உழவுத் தொழிலே அல்லவா?

நீர், நிலம், வான் ஆகிய இயற்கைச் சக்திகளின் துணை கொண்டே உழவன் தனது தொழிலைத் திறம்பட நடத்து கிறான். இயற்கை நெறி பிறழுமேல், உழவுத் தொழில் மக்களுக்கு உணவைத் தருவது இயலாதென்பது வெளிப் படை. எனவே, உழவன் தனது தொழிலுக்கு உறுதுணை யாக உள்ள இயற்கைச் சக்திகளுக்குத் தலை வணங்கி நன்றி செலுத்தும் நாளே பொங்கல் நன்னாள்.

உழவுத் தொழில், உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவான ஒன்று. அப்படி யிருந்தும், அத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு திருவிழாக் கொண்டாடுவது, அதுவும் உழவுத் தொழில் செய்யும் தமிழர் மட்டுமல்லா மல், ஏனைய எல்லாத் தமிழரும் இணைந்து நின்று தங்கள் இனத்தின் பண்பாட்டுத் திருநாளாகக் கொண்டாடுவது ஏன்? காரணம், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடியே என்பதாகும். எனவே, தமிழர் பெருமையுடன் இத்திருநாளைக் கொண் டாடுகின்றனர்.

பொங்கல் திருநாள் கொண்டாடுவதன் காரணத்தை அறிந்தோம். ஆனால், அது தோன்றிய காலத்தை அறிய இயலவில்லை. ஒருவேளை அழிந்துபட்ட தமிழ் இலக்கியங்கள் அகப்பட்டால் அறியலாம் போலும்! அந்த அற்புதத்தைச் செய்வார் யார்?

பொங்கல் திருவிழாவோடு உறைந்து நிற்கும் தமிழர் பண்பாட்டைச் சிறிது ஆராய்வோம். பொங்கல் பெருநாள் தோன்றிய காலத்தில் உழவனுக்கு அவன் உழைக்கும் நிலத்தின்மீது உரிமை இருந்தது. அவன் எந்த ஆண்டைக்கும் அடிமை இல்லை. உலகம் அவனை அண்டிப் பிழைத்தது. மண்ணுடையான் (வேள் ஆளன்) என்ற மாண்புமிக்க பெயர் அவனுக்கே உரித்தாயிருந்தது. பண்டைக்கால உழவன் தனக்காகவும் உலகத்துக்காகவும் உழைத்தான். தனது உழைப்பில் தேவைக்கு எடுத்தது போக எஞ்சியதைச் சேமித்துவைக்கும் 'பதுக்கல் புத்தி' அவனிடம் இருந்ததில்லை. பாடுபட்டுக் கண்ட பலனை எல்லோருக்கும் பகுத்து ஈந்து பல்லுயிர் ஓம்பினான்.

உழவன் உள்ளத்தின் வள்ளண்மையைப் பார்த்தோம். அவன் உழுத நிலத்தின் வண்மையையும் பார்ப்போம். இயற்கை நெறிபிறழாது உதவ உழவன் ஓய்வின்றி உள்ளக் களிப்புடன் உழைக்க, நிலம் பொன் கொழிக்கும் வளமுடையதாயிருந்தது. "சோழ வளநாடு சோறுடைத்து" என்ற சிறப்புப் பெயர் பெற்றது சோழநாட்டு மண். இக் காலத்தில் மனிதருக்குப் பட்டம் தரும் பழக்கத்தைப் பார்க்கிறோம். ஆனால், தனி மனிதனைப் போற்றுவதை விரும்பாத, பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் பேதமைப் புத்தி என்று உணர்ந்த பண்டைத் தமிழர் மண்ணுக்குப் பட்டம் தந்த மாண்பினை என்னென்று சொல்வோம்! வளமார்ந்த வயல்களுக்குப்

பொன் வயல் என்ற பட்டம் தந்த பண்பாடு தமிழருக்கே உரியது. இந்த வளம் வாய்ந்த நிலத்தைச் சேர்ந்திருந்த காரணத்தால் விளையாத நிலம்கூடப் 'பொன்விளைந்த களத்தூர்' எனச் சிறப்புப் பெயர் பெற்றது. அதிகம் சொல்வானேன்? நிலத்தைத் தாயெனவே தலைவணங்கினான் தமிழன். இது, பண்டைநாளில் பொங்கல் விழாக் கொண்டாடிய காலத்தின் நிலை.

இன்றும் பொங்கல் விழா வருகின்றது. என்ன பொங்குகிறது? பால் என்பீர்கள். ஆனால், பாலுக்கு அழும் பச்சிளம் குழந்தைகளின் கோரக் குரல்கள் கேட்பதை எங்ஙனம் மறப்பது? 'வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்' பெருகி, 'நீங்காத செல்வம் நிறைந்து இருந்த திருநாடாம் நம் தமிழ் நாட்டில், அந்தப் பொங்கலை நினைத்துவிட்டு, பால் பஞ்சம் நேர்ந்துள்ள இன்றைய பொங்கலை நினைத்தால் ஆத்திரம்தான் பொங்குகிறது.

இன்றும் உழவன் இருக்கிறான்; பயிர் செய்ய நிலம் இருக்கிறது; பாடுபட மனமும் இருக்கிறது. ஆனால், அந்தப்பாவி மகனுக்குத் தான்பட்ட பாட்டின் பலனை அனுபவிக்கும் பாக்கியம் இல்லையே! அதுமட்டுமா? அவன் அடிமை. வெறும் அடிமை மட்டுமல்ல; அடிமைக்கு அடிமை; அதுதான் விநோதம்! ஆள்வோருக்கு அடிமை ஜமீன்தார்; ஜமீன்தாருக்கு அடிமை ஏழை விவசாயி.

பண்டைநாள் பொங்கல் விழாவில் பாடுபடும் உழவனுக்கு மாடு, கன்று உண்டு. தான் மகிழும் பொங்கல் விழாவில் தன்னோடு உழைக்கும் மாட்டுக்கும் மகிழ்ச்சி அளித்தான். இயற்கைச் சக்தியாகிய கதிரவனுக்கு முன் நாள் பொங்கல்; செயற்கைச் சக்தியாகிய மாட்டுக்கு

மறுநாள் பொங்கல். தன்னை அலங்கரிக்கத் தவறினாலும், மாட்டை அலங்கரித்து மனம் மகிழ்ந்தான். இன்று மண்ணில் உரிமை இல்லாதது போலவே, மாட்டின் மீதும் அவனுக்கு உரிமை இல்லை. ஆட்கொண்ட எசமானனுக்கு தான் அடிமைப்பட்டு உழைப்பதோடு அந்த மாட்டையும் உழைக்கச் செய்வதைத் தவிர, அதை உள்ளம் களிக்கச் செய்ய அவனுக்கு உரிமை இல்லை.

நிலத்தின் வளத்தைப்பற்றி நினைந்துவிட்டால் நம் நெஞ்சு கொதிக்கின்றது. 'பொன் விளைந்த பூமி' என்ற பெயர் புலவனின் 'கற்பனைச் சரக்கு' என்றாயிற்று. முப்போகம் விளைந்த அந்த நிலவளம் இன்று நில்லாது போயிற்று. அரிசிக்குப் பிறநாடுகளிடம் பிச்சையெடுக்கும் கோரம் பேசுந்தரமல்ல. காரணம் என்ன? தமிழன் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வதை மறந்தான். அவனுக்கு அரசில்லை; அதிகாரம் இல்லை. எனவே, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பயிர் செய்யப் பயன்பட்ட கருவி இந்தப் பகுத்தறிவுக் காலத்திலும் மாறியபாடில்லை.

அந்தோ! அரசிழந்த தமிழன் அறிவையும் இழந்து விட்டான். உரிமையுடன் உலகாண்ட தமிழன், 'ஊரும் சதமல்ல...' என்று ஒப்பாரிவைக்கத் துவங்கிவிட்டான்! தன்செயல் கொண்டு தரணியை ஆண்ட தமிழன், 'என் செயலாவது யாதொன்றுமில்லை' என்று ஏங்கத் துவங்கி விட்டான். இல்லறம் ஒன்றே இணையற்ற அறம்; வரு விருந்து ஓம்புவதே வாழ்வானின் கடன்; பணி செய்து கிடப்பதே படித்ததன் பயன்; தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சியால் முடித்தல் இயலும் என்ற பண்பாடெல்லாம் பாழுக்கு இறைத்து, 'பரதேசிகள்' சொன்ன பகுத்தறிவற்ற வாதங்களுக்கு அடிமையானான். உரிமை இழந்தான்; உடைமை இழந்தான்; உள்ளத்தையும் இழந்தான்!

மண்ணுந் தணலாற வானும் புகையாற
எண்ணரிய தாயும் இளைப்பாறப்—பண்ணுமயன்
கையாற வும்மடியேன் காலாற வுங்கண்பார்
ஐயா திருவையா று.

என்று அலறி அழுகின்றான். இந்த அப்பாவிக்கு வேறு எங்கேதான் இடம் கிடைக்கும்!

இன்றைய பொங்கல் திருநாளில் தமிழனின் சீரழிந்த நிலையை மேலே கூறினோம். இந்த நிலையில், தமிழன் கொண்டாடுவது ஆனந்தப் பொங்கல் அல்ல; ஆத்திரப் பொங்கல்! நாம் மேலே சொன்ன தமிழினத்தின் அவல நிலை, அறிவற்ற நிலை, ஆண்மையழிந்த நிலை நேற்றோடு தீர்ந்தது!

இன்று பொங்கல் நன்னாள். தமிழா! உன் வீட்டில் உலை பொங்காமல் இருக்கலாம். அதற்காகக் கவலைப் படாதே. உன் உள்ளமாவது பொங்கட்டும்!

உன் அறிவை அழித்து அறியாமையைத் தந்த எழுத்தின் தலையெழுத்து இன்றோடு தீர்ந்தது. இன்று, பொங்கல் திருநாளில் புது எழுத்துப் பிறந்துவிட்டது. அதுதான் உன்னை வாழ்விக்க வகைகாணும் வாய்மையுள்ள எழுத்து.

இன்றைய பொங்கல் நன்னாளில் உன் வீட்டு அடுப்பில் தீ மூளவில்லையே என்று தேம்பி அழாதே. உன் உழைப்பைப் பறித்து உள்ளத்தில் தீ மூட்டிய அந்த முதலாளித்துவக் கோட்டையிலே 'மூண்டது தீ' என்று மூன்றுலகும் கேட்க முழக்கமிடு!

'அரசிழந்தோம், அடிமையானோம்' என்று இன்றைய பொங்கல் நன்னாளிலே புலம்பி அழாதே. ஆதிக்கவாதிகளின் அரியாசனம் ஆட்டம் கண்டுவிட்டதென்று உன் உள்ளத்தே ஆனந்தம் பொங்கட்டும்.

*தமிழா! "அடைந்துவிட்டோம் அரசுரிமை; அஞ்ச மாட்டோம்" என்று ஆரவாரம் செய்!*

*விவசாய மக்களே! உங்கள் நிலத்தில் புகுந்த முதலைக் கூட்டங்களின் கடைசி மூச்சுக்குக் காலம் வந்துவிட்டது. உழவர் மக்கள் உள்ளம் பொங்கினால் இந்த உலகம் பொங்கும் என்ற உண்மையை ஓங்கி முழங்குங்கள்! "படை திரண்டோம்; பாடுபடும் நிலத்தைப் பறிகொடுக்கமாட்டோம்" என்று இன்றைய பொங்கல் நன்னாளிலே பாரறியக் கூவுங்கள்!*

*தமிழா, பொங்குது பொங்கல்! உலை பொங்கா வீட்டில் உள்ளம் பொங்குது! தமிழனுக்கு இந்த ஆண்டு ஆத்திரப் பொங்கல்! அடுத்த ஆண்டு ஆனந்தப் பொங்கல்!*

*வாழ்க தமிழகம்!* *வாழ்க தமிழினம்!!*

*பொங்குக பொங்கல்!!!*

*'தமிழ் முரசு' 15-1-1947,*

# ஓமந்தூரார் உபதேசம்!

உலகில் நாளுக்கு நாள் எத்தனையோ மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன. அவை பெரும்பாலும் முற்போக்கானவையாகும். தமிழகத்திலும் அதிக அளவில் இல்லாவிடினும், சிறிதளவேனும் சமூகத் துறையில் முற்போக்கான மாறுதல்கள் நிகழ்ந்தே வருகின்றன. ஆனால், சமயத் துறையில் மட்டும் நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. சாமியின் பெயராலும் சமயத்தின் பெயராலும் சமூகத்தைச் சீர்குலைத்து, சமூகப் பொதுச் சொத்தைச் சூறையாடும், மக்களை மாக்களாக்கும் இழிச் செயல்கள் இன்றளவும் நடந்தே வருகின்றன. இங்கே துறவிகள் வேடத்தில் மிராசுதாரர்களைக் காணலாம். 'சாமிகள்' என்ற பெயரால் காமிகளைப் பார்க்கலாம். கடவுள் பெயரால் நடைபெறும் கொடுமைகளும் எண்ணில. இந்தக் கொடுமைகளுக்கு முடிவு காண எவ்வளவோ பெரியார்கள் முயன்றதுண்டு. இன்றல்ல, நேற்றல்ல; பல நூற்றாண்டுகளாக. அவர்களது முயற்சிகளெல்லாம் முறியடிக்கப்பட்டன.

தீண்டாதாருக்கு கோயில் நுழைவு வேண்டிய இராமானுசர் அடைந்த கதியை நாடு நன்கு அறியும்.

சாதி, சமயச் சழக்குகளைக் கண்டித்ததற்காக— இயற்கை வடிவான இறைவனை சோதி வடிவில் வழிபடும் முறையை வலியுறுத்தியதற்காக அருட்சோதி இராமலிங்க வள்ளலார் அடைந்த இன்னலுக்கு அளவே இல்லை.

திருவாசகத்துக்கு உரையெழுத முற்பட்ட மறைமலை யடிகளாரும், பெண்மையை வெறுக்கும் துறவு நிலையைக் கண்டித்தமைக்காகப் பெரியார் திரு. வி. க. வும் நாத்திக ரோடு சேர்க்கப்பட்டு நையாண்டி செய்யப்பட்ட காலமும் உண்டு.

உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகள், தீண்டப் படாதாருக்கு உரிமை கோரியதற்காக புனாவில் அவர் மீது குண்டெறிந்துக் கொல்ல முயன்றனர். பாலக்காட்டில் அவரைத் தடிகளாலும், கற்களாலும் தாக்க வந்தனர்.

சென்னை அரசாங்கத் தலைமை அமைச்சரும் அதே சமயச் சீர்திருத்தத் தொண்டில் ஈடுபட முனைந்திருக் கிறார். சென்னை மாகாணத்தில் பத்துக் கோடி ரூபாய் கோயிலின் பெயரால்—மடங்களின் பெயரால் பாழாக்கப் படுகின்றதே என்று மனம் பதறுகிறார். சமயச் சொத் துக்கள் மக்களின் கல்விக்கும் நாட்டின் தொழில் வளர்ச் சிக்கும் பயன்பட வழி செய்தே ஆக வேண்டும் என்று முழக்கம் செய்கிறார். தமது கருத்துக்கு ஆதரவு தேட மடாதிபதிகளையும், கோவில்களின் தரும கர்த்தர்களையும் கொண்ட ஒரு மாநாட்டை சென்னை அரசாங்க விருந்து மாளிகையில் கூட்டி அதில் தமது கருத்தையும் வெளியிட் டிருக்கிறார்.

கோவில்களையும் மடங்களையும் சீர்திருத்த ஓமந் தூரார் என்ன திட்டம் வைத்திருக்கிறார் என்பதை அவர் வெளியிடவே இல்லை. சமயச் சீர்திருத்தம் வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். என்றா லும், எந்த வகையில் சீர்திருத்துவது என்பதில் மட்டும் ஆழமான கருத்து வேற்றுமை சீர்திருத்தவாதிகளிடையே இருந்து வருகிறது.

கோவில்களாகட்டும், மடங்களாகட்டும்; எந்த அடிப் படையில் அவற்றைச் சீர்திருத்துவதென்பதை முதலில் முடிவு செய்ய வேண்டும். தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழர் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே சமயச் சீர்திருத்தங்கள் செய்ய முற்பட வேண்டும். இதை மறுப்போர் தமிழராயிருக்க முடியாது.

முதலாவதாக, மடங்களைக் கவனிப்போம். இந்த மடங்கள் சமூகத்துக்குத் தேவையா? துறவு நிலை என்பதென்ன? பெண்மையை வெறுப்பதன்றோ? சமூகத்தில் சரிபாதியினரான பெண்ணினத்தை வெறுப்போரைச் சமூகத்தை நேசிப்பவராகக் கருத முடியுமா? தனிப்பட்ட ஒரு மனிதன் பிரம்மசரியத்தை மேற்கொள்வதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆனால், அதை ஒரு இயக்கமாக்கி பெண்ணினத்தைப் பழித்தும் வெறுத்தும் ஸ்தாபன ரீதியாகப் பிரசாரம் செய்யச் சமூகத்தில் இடம் தருவது கூடாது. மேலும், இன்றைய மடங்களில் 'அரசு' செலுத்தும் மடாதிபதிகளின் 'சமய சேவை'யில் நாடு நம்பிக்கை இழந்து விட்டது. ஓமந்தூராரும் இதை ஒப்புக்கொள்வார் என்பதில் நமக்கு ஐயமில்லை. உலகை வெறுத்து, உடம்பை 'வெறுத்து'த் துறவு பூண்ட இந்தச் 'சுவாமிகள்' கூட்டம் வைர மோதிரங்களையும், பட்டாடைகளையும், பஞ்சணைகளையும் வெறுக்க முடியவில்லை. இத்தகையவர்கள் இருந்து வாழும் மடங்களால் நாட்டுக்கு உண்டாகும் நன்மை என்ன? ஜமீன்தார்களை ஒழிக்கும் சர்க்கார், ஜமீன்களுக்கு அடுத்த ஸ்தானத்தில், ஆனால், அதை விட மிகக் கொடுமையான முறையில் ஆதிக்கம் செலுத்தும் பட்டா இல்லாத பண்ணை எசமானர்கள் வாழும் மடங்களைச் சீர்திருத்தம் செய்யாமல், அவற்றுக்கு ஆதரவு கொடுக்க முனைவது அறிவுடைமையாகுமா? இதுதான் ஓமந்தூராரின் 'சீர்திருத்தம்' என்றால், அதை அறிஞர் உலகம் ஆமோதிக்காது.

இரண்டாவதாகக் கோயில்களைக் கவனிப்போம். சென்னை மாகாணத்தில் இருபத்தெட்டாயிரம் கோயில்கள் இருப்பதாக நமது தலைமை அமைச்சர் கூறுகிறார். முச்சந்திப் பிள்ளையார், தெருவீதியம்மன் போன்ற 'ஏழைக் கடவுளர்'களின் இடிந்துபட்ட கோயில்க ளெல்லாம் இந்தக் கணக்கில் சேர்ந்திரா தென்பதில் ஐயமில்லை.

தமிழகக் கோயில்கள் யாரால், எதற்காகக் கட்டப் பட்டன என்பதை முதலில் கவனிக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் கோயில்களைக் கட்டியவர்கள் தமிழ் இனத்தின் பழங்குடி மக்கள். ஆம்; கோயில்களைக் கட்டியவர் உழைப்பாளித் தமிழர்; ஆனால், அவற்றின் நிர்வாகம் மட்டும் உழைக்காமல் உண்ணும் ஒரு சாராருக்கே உரிமையாகி விட்டது. பன்முறை கூறியுள்ளோம்; இம்முறையும் கூறுகிறோம். கோவில்கள் மக்களின் வாழ்க்கையைப் பண்படுத்தவே கட்டப்பட்டன. இதை அறிவுடைய எவரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் இன்றைய நிலைமை என்ன? கோபுர வாயிற்படியிலிருந்து இறைவன் அமர்ந்துள்ள இருட்டறை வரையில் ஒவ்வோர் அடி நிலத்துக்கும் ஒவ்வொரு தத்துவம். இன்ன இடத்தில் இன்ன சாதிதான் நிற்கலாம் என்ற இறுமாப்பு வாதம். 'அன்பெனும் பிடிக்குள் அகப்படுவான் ஆண்டவன்' என்றார் அருட்சோதி வள்ளலார். ஆனால், இன்று ஆலயத்துக் கடவுளரெல்லாம் அடங்கி யிருப்பது அன்பெனும் பிடியிலல்ல; அர்ச்சகரின் பிடியுள்! எனவே, கோயிலைச் சீர்திருத்த விரும்பும் ஓமந்தூரார் முதலில் கடவுளுக்கு 'விடுதலை' அளிக்கட்டும்! காசியிலிருப்பது போன்று கடவுளரை எல்லோரும் தொட்டுத் தொழும் உரிமை இங்கேயும் இருக்கவேண்டும். இடையே ஓர் ஆள் தேவையில்லை.

நாட்டில் இரண்டு வகை இயல்கள் இருக்கின்றன,

ஒன்று சமூக இயல்; இன்னொன்று சமய இயல். இரண்டுக்கும் இருவகைத் தொழில்களும் இருக்கின்றன. இவற்றில் எது முக்கியம்? சமூகத் தொழில்களா, சமயத் தொழில்களா? சமூகத் தொழில்களே என்பதை இந்த இருபதாம் நூற்றாண்டில் எவரும் மறுக்க முடியாது. மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனது முதற்கடமை சமூகத்துக்கான தொழிலில் ஈடுபடுவதேயாகும். இரண்டாவதாகவே சமயத் தொழிலுக்கு இடமிருக்க வேண்டும். அதுவும் சமூகத் தொழிலுக்குப் பாதகமற்ற வகையில்தான்.

இன்றைய கோவில்களில் நாம் காண்பதென்ன? சமூகத் தொழிலில் ஈடுபடக் கடமைப்பட்டுள்ள இளைஞர்கள் எத்தனைபேர் சமயத் தொழில் செய்வதாகச் சாக்குச் சொல்லிக் கொண்டு கோயிலின் சொத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்பதை ஓமந்தூரார் உற்று நோக்க வேண்டும். ஆலயத்துள்ளே ஒவ்வோர் அடிக்கும் இந்த இளைஞர் கூட்டம் வீணே உண்டு உறங்குவதைப் பார்க்கிறோம். இந்த நிலை மாற வேண்டும். சமூகத் தொழிலில் ஈடுபடவேண்டிய இளமைப் பருவத்தில், சமயத் தொழிலில் ஈடுவடுவதை அனுமதிக்கக் கூடாது.

சாதிகளற்ற சமுதாயத்தைப் பற்றி நிறையப் பேசுகிறோம், எழுதுகிறோம். பிறப்புக் காரணமாக எவருக்கும் எந்தவித விசேஷ உரிமையும் அல்லது தடையும் இருக்கக்கூடாது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால், கோயில்களில் இன்று நாம் காண்பதென்ன? நிலப்பிரபுக்களும் அர்ச்சகர்களும் ஆதிக்கம் செலுத்தும் நிலையல்லவா? இது நீக்கப்பட வேண்டும். 'தகுதிக்கும் திறமைக்கும்' முதலிடம் வேண்டும். 'சாதியாலும் பிறப்பாலும் இதைத் தடுக்கக் கூடாது'— என்றெல்லாம் கூறப்படும் இக்காலத்தில், கோவில்களில்

மட்டும் இதற்கு மாருன விதியை நிலைக்கவிடுவது நியாயமா?

சமயச் சீர்திருத்தத்தில் முனைந்துள்ள ஓமந்தூராரை வேண்டுகிறோம்: கோயில் வழிபாடு செய்விக்கும் அர்ச்சகர்—பட்டாச்சாரி வேலைக்கு பிறப்பைக் காரணமாகக் கொண்டு உரிமை தரும் முறைக்கு முடிவு கட்டுங்கள். சமயப் பற்றும், ஒழுக்கமும், சாத்திர அறிவும், தமிழ் மறைகளை ஓதும் திறமையும் உள்ளவர் யாராயினும், எந்தச் சாதியினராஞலும் அவருக்கு ஆலய வழிபாட்டு வேலையில் அமர உரிமை இருக்க வேண்டும்.

காங்கிரஸ் அரசாங்கத்தார், ஆலயத்தில் தமிழுக்கு முதலிடம் இல்லாக் கொடுமையைக் கண்டும் காணுதது போல் காலம் தள்ளுகின்றனர். இசையில் ஏற்றங் கொண்ட தேவாரம், திருவாசகம், பிரபந்தம் போன்ற தமிழ் மறைகளுக்குத் தமிழ்நாட்டுக் கோயில்களில் இடமில்லையென்ருல், அதை எந்தத் தமிழனேனும் பொறுத்துக் கொள்ள முடியுமா? வந்த மொழியான வடமொழிக்குள்ள உரிமை சொந்த மொழியான தமிழுக்கு இல்லையென்ருல், அதையும் தமிழர் பொறுப்பதென்ருல், தமிழ் இனம் இருந்தும் இறந்தது போலத்தான். இந்த இழிநிலையை ஒழிப்பது சமயச் சீர்திருத்தவாதிகளின் முதற் கடமை. தமிழ் மறை ஓதும் திறமையற்ற எவருக்கும் தமிழகத்துக் கோயில்களில் இடம் இருக்கக் கூடாது.

பள்ளிகளில் நாத்திகம் பரவுவதாக முதலமைச்சர் கவலைப்படுகிருர். சமயத்தில் புகுந்த குறைகளைக் காரண மாகக் கொண்டு, ஒழுக்கத்தையும் மூடநம்பிக்கையில் சேர்த்துக் கண்டிக்கும் நிலை நாட்டில் பெருகி வருகிற

தென்பதை நாமும் ஒப்புக்கொள்கிறோம். இது, ஒரு தீமையைத் துணைகொண்டு இன்னொரு தீமை வளர்வதற் கொப்பாகும். அந் நிலையைப் போக்கி ஒழுக்க சமயத்தை நிலைநாட்ட முற்படுவது வரவேற்கத் தக்கதே. ஆனால், இன்று நாட்டில் நிலவுவது ஒழுக்க சமயமா? தமிழகத்தில் சங்க காலத்தில் நிலைத்திருந்த தமிழரின் ஒழுக்க சமயம் ஒழிந்தே போயிற்று. மீண்டும் அந்த ஒழுக்க சமயத்துக்கு உயிர் அளிக்க ஓமந்தூரார் விரும்பினால், அவர் பின்கண்ட காரியங்களைச் செய்தாகவேண்டும்.

மண்ணாபரணம் பூணும் மக்கள் வாழும் தரித்திர நாட்டில், கடவுளுக்குப் பொன்னாபரணம் பூட்டும் மடமையை ஒழிக்கட்டும்!'

கூரைவேய்ந்த குடிசைக்கும் கதியற்ற மக்கள் வாழும் நாட்டில், கோபுரக் கலசத்திற்குப் பொன் தகடு போடுவதைத் தடுக்கட்டும்!

சமயச் சொத்துக்களை யெல்லாம் சமூகத்தின் பொதுச் சொத்துக்களாகச் செய்யட்டும்!

தெய்வத்தை எல்லோரும் எவர் தயவு மின்றித் தொழும் நெறி நாடெங்கும் பரவ வழி காணட்டும்.

கோயில் வழிபாட்டில் கன்னித் தமிழுக்கே முதலிடந் தரட்டும்!

இவைதான் பண்டைத் தமிழர் பண்பாட்டு நெறி. வள்ளுவர், வள்ளலார் வழியில் வந்த நமக்கும் அதுவே காலத்துக்கேற்ற நெறியுமாகும்.

'தமிழ் முரசு' 15-7-1947.

# ஆகஸ்டு - 15

ஆகஸ்டு மாதம் 15உ இந்தியாவின்—தமிழகத்தின் வரலாற்றில் ஒரு சிறப்பான நாளாகும். இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவை அடக்கி ஆண்டு வந்த ஏகாதிபத்தியம், அன்று இந்தியாவை ஆளும் பொறுப்பை இந்தியத் தலைவர்களிடம்—இந்தியாவில் செல்வாக்கு வாய்ந்த காங்கிரஸ், லீக் கட்சிகளிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறப்போகிறது. எனவே, ஆகஸ்டு 15-ம் நாளில் விழாக் கொண்டாட வேண்டுமென்று காங்கிரசும், மாகாண—மத்திய அரசாங்கங்களும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஆகஸ்டு 15-ம் தேதியின் சிறப்பில் தமிழருக்குப் பெரும் பங்கு உண்டு. வெள்ளையரை வெளியேற்ற நடத்திய சுதந்திரப் போரில் தமிழ் இனத்தார் காட்டிய வீரமும், அடைந்த இன்னலும் வேறு எந்த இனத்தவருக்கும் குறைந்ததல்ல. அதிகம் என்று கூறினாலும் பொருந்துவதே. ஆங்கிலப் படைகளை எதிர்த்து நேருக்கு நேர் போர் புரிந்த பாஞ்சாலங் குறிச்சிக் கட்டபொம்மன், ஆங்கில அதிகாரத்தையும் வாணிகக் கொள்ளையையும் எதிர்த்த வீரர் வ. உ. சி., போலீசாரின் குண்டாந்தடிக்கு இரையான திருப்பூர் குமரன் போன்ற தமிழகத்து வீரர்களின் வரலாறுகள் வஞ்சனையின்றி வாய்மையுடன் எழுதப்படுமானால், உலகமே தமிழ் இனத்தின் தேசபக்தியைக் கண்டு வியக்கக்கூடிய உண்மைகளை அவற்றில் காணலாம்.

ஆகஸ்டு 15-ந் தேதியைத் தமிழர் கொண்டாடுவதன் பொருள் எதுவாக இருக்க வேண்டும். சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழகம் அமைந்துவிட்டதென்பதா? இல்லவே இல்லை. பாட்டாளிகளின் பசி தீர்க்கும் சோஷலிச ஆட்சி கிடைத்துவிட்டதென்பதா? அதுவுமில்லை. பின் எதற்காக நாம் அந்த நாளைக் கொண்டாட வேண்டும்? அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

முதலாவது, நமது பொதுப் பகையான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெளியேற்றி வெற்றி கண்ட நாள்.

இரண்டாவதாக, இந்திய சுதந்திரப் போரில் ஈடுபட்டு சொல்லொணு இன்னலுற்ற எல்லா வீரர்களுக்கும் தமிழ் நாட்டினர் தலை வணங்கி நன்றி செலுத்த வேண்டிய நன்னுள்.

ஆகவே, தமிழினத்தை வேண்டுகிறேம். நமக்கு எவ்வளவு குறைகளிருப்பினும், நமது பொதுப் பகைவனை முறியடித்து வெற்றி கண்ட நாளை விழாக்கொண்டாடுங்கள். சுதந்திரப் போரில் உயிர்நீத்த தியாகிகளுக்குத் தலைவணங்குங்கள். இன்று நம்மிடையே வாழும் வீரர்களுக்கும் வாழ்த்துக் கூறுங்கள்.

ஆகஸ்டு 15ஐ தமிழருக்குத் 'துக்க நாள்' என்கின்றனர் சிலர். இது தவறு இரண்டு முனைகளில் போரிடும் படையினருக்கு, ஒரு முனையில் போர் முடியுமானுல் அது எப்படித் துக்க நாளாகும்? பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பு முனை, இந்திய முதலாளித்துவ எதிர்ப்பு முனை ஆகிய இரண்டிலும் தமிழர் வெற்றி கண்டாலொழிய தமிழகத்துக்குப் பூரண விடுதலை இல்லை. தமிழ் இனத்துக்குப் புதுவாழ்வில்லை. இது உண்மைதான் என்றுலும், ஏகாதிபத்தியத்தை வெளியேற்றுத நிலையில், இந்திய

முதலாளித்துவ ஆதிக்கத்தை மட்டும் எதிர்த்து தமிழர் போராட்டம் நடத்தினுல் அது ஏகாதிபத்தியத்துக்குத் துணை செய்யும் உள்நாட்டுக் குழப்பமாக இருக்குமே யொழிய, தமிழருக்குப் பூரண விடுதலை அளிக்கும் சுதந்திர இயக்கமாக இருக்க முடியாது. ஆகவே, தமிழர் பிற இந்திய இனங்களுடன் இணைந்து நின்று பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தை எதிர்த்துப் போர் புரிந்ததோ, அந்தப் போர் முடிந்து வெற்றி கண்ட நாளை விழாக் கொண்டாடுவதோ எப்படித் தவருயிருக்க முடியும்? ஆகஸ்டு 15-ந்தேதி துக்கம் கொண்டாட வேண்டியது இங்கிலாந்தே யொழிய, இந்தியா அல்ல; தமிழகமும் அல்ல. இதைத் 'துக்க நாள்' கொண்டாடும் நண்பர்களுக்கு நினைப்பூட்டுகின்றேம்.

ஆகஸ்டு 15-ந்தேதி கொண்டாட்டத்தில் பங்கு கொண்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர் புரிந்த தமிழ் வீரர்களுக்கு வாழ்த்துக்கூறி வணங்குவது, தனிப் பட்ட ஒரு கட்சிக்கோ, அல்லது மனிதர்களுக்கோ செய்யும் வணக்கம் அல்ல. தமிழ் இனத்தின் வீரத்துக்குச் செய்யும் வணக்கமாகும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஈடுபட்ட ஒவ்வொரு வீரரும் தமிழக விடுதலையை விரும்பாத வடஇந்திய முதலாளி களின் பக்தர்கள் என்று கூறுவதெல்லாம் வெறும் கற்பனை வாதம். காலம் வரும்போது, ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய ஒவ்வொரு வீரத் தமிழனும் இந்திய முதலாளிகளின் ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போரிட்டு தமிழகத்தில் சோஷலிசத் தமிழரசு நிறுவப் போவதைக் காணலாம். எனவே, ஆகஸ்டு 15ஐ துக்க நாள் என்போர், விடுதலைக்குப் போரிட்ட தமிழ் வீரர் களின் உணர்ச்சியைப் புண்படுத்துகிருர்கள் என்பது நினைவிருக்கட்டும். இந்த விபரீதச் செயலால் தமிழகத்தின்

விடுதலையை விரும்பாத விரோதிகள் முகாமுக்கு அவர்களை விரட்டுகின்றனர் என்றும் எச்சரிக்கின்றோம். நேற்று வரை நிலைமை எதுவானாலும், இனி தேச பக்தியுள்ள எந்தத் தமிழனையும் தமிழர் இயக்கத்துக்கு விரோதமாகச் செல்லும்படி விட்டுவிடக் கூடாது. அப்படிச் செய்வது தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

ஆகஸ்டு 15ல் தமிழரின் சுதந்திரப்போர் குமரிமுனையில் துவங்கப்போகின்றது. சர். சி. பி.யின் பாசிசத்தையும் மலையாளிகளின் ஆதிக்க் புத்தியையும் எதிர்த்து திருவிதாங்கூரிலுள்ள 15 லட்சம் தமிழர்கள் போரிலிறங்குகின்றனர். அவர்களின் ஒரே பிரதிநிதித்துவ அமைப்பான திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் அந்தப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தப்போகின்றது.

பிரெஞ்சு ஆதிக்கத்திலுள்ள புதுவை, காரைக்கால் பிரதேசங்களில் வாழும் சுமார் மூன்று லட்சம் தமிழர்களும் சுதந்திரப் போரில் இறங்கி விட்டனர்.

திருவிதாங்கூர் பாசிச ஆட்சியும், பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆட்சியும் தமிழ் மக்களைப் பழிவாங்குகின்றன. கூட்டத்திற்குத் தடை, தொண்டர்களுக்குக் கத்திக்குத்து, பெண்களுக்கு மானபங்கம் ஆகிய பல்வேறு கொடுமைகளை அவர்களுக்கு இழைக்கின்றன. பலர் உயிர்த்தியாகமும் செய்துவிட்டனர்.

எனவே, ஆகஸ்டு 15-ந்தேதியைக் கொண்டாட விருப்பமில்லாதவர்கள், திருவிதாங்கூரிலும் பிரெஞ்சுத் தமிழகத்திலும் நடக்கும் போராட்டங்களிலேனும் பங்கு கொள்ளட்டும். அந்தப் போராட்டங்களை வளர்த்து அவற்றையே பிற இனத்தவரின் ஆதிக்கத்தை எதிர்க்கும் இயக்கமாக குமரி முதல் வேங்கடம் வரை உருவாக்கட்டும். அதைவிட்டு கடமையைச் செய்த, இனியும் செய்ய

விருக்கின்ற வீரர்களின் உணர்ச்சியைப் புண்படுத்தும் வாதங்களைக் கிளப்பிக் கொண்டிருப்பது தமிழகத்தில் மேலும் மேலும் பிளவுக்கும் சச்சரவுக்கும் வழி செய்வதாகும். அதுவும் சுதந்திரப் போராட்ட காலத்தில் பிரிட்டிஷாரோடு ஒத்துழைத்தவர்கள், அவர்களிடம் பட்டங்கள் பெற்றவர்கள், இன்னமும் அப்பட்டங்களைத் துறக்காதவர்கள் ஆகஸ்டு 15-ஐ துக்கநாள் என்று கூறும் போது அதற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் மதிப்புத் தருவதற்கில்லை.

தமிழரசுக் கழகத்தைப் பொறுத்தவரையில் நிலைமை இதுதான் :

> ஏகாதிபத்தியத்தை, வெளியேற்றி வெற்றிகண்ட நாள் என்ற வகையில் ஆகஸ்டு 15-ஐக் கொண்டாடுகிறோம். ஏனெனில், ஆகஸ்டு 15-க்குப் பிறகு பிற இனத்தவரின் ஆதிக்கத்தை எதிர்த்து நாம் போரிடவேண்டியிருக்கிறது. ஒரு முனையில் முடிந்த போர் மறுமுனையில் துவங்குகின்றது. ஆகவே, **ஆகஸ்டு 15**உ நமக்குப் **போர் நிறுத்த நாளல்ல; போர் முனையும் போர் முறையும் மாறும் நாள்.** அந்நாளில் நமக்குள்ள களிப்பு ஆகாயப்படை, தரைப்படை, கப்பற்படை முதலியவற்றில் பலம் பொருந்திய ஒரு ஏகாதிபத்தியத்தை வீழ்த்திேனோம்—வெற்றி கண்டோம் என்பதேயாகும்.

எனவே, தமிழினத்தவர்களை, தமிழரசு வாதிகளை வேண்டுகிறோம் :

**ஆகஸ்டு** 15உ விடுதலை விழாவில் பங்குகொண்டு **வ. உ. சி., திருப்பூர்** குமரன் போன்ற வீரத் தியாகிகளுக்கு

வணக்கம் செலுத்துங்கள். இன்று நம்மிடையே வாழும் வீரர்களுக்கும் வாழ்த்துக் கூறுங்கள்.

அதே நேரத்தில், சோஷலிசத் தமிழரசை அடைந்தே தீருவோம். அதை எதிர்ப்பவர் எவராலுைம் அவர்களின் எதிர்ப்பை முறியடித்து, தமிழ்நாட்டில் தனியரசை—தமிழரசைக் கண்டே தீருவோம் என்ற உறுதி மேற்கொள்ளுங்கள்.

**சுதந்திர இந்தியா வாழ்க!**

*'தமிழ் முரசு' 1-8-1947.*

# காணிக்கை

ஆதி மனிதனைப் பெற்றெடுத்தது இந்தியா; மனித சமூகத்தின் நாகரீகத்திற்கு வித்திட்டதும் இந்தியா; அன்பு மதத்தை அகில உலகத்துக்கும் அளித்த புத்தரைப் பெற்றெடுத்ததும் இந்தியா. மக்களைக் கொன்று மண்ணை விரும்பாத அசோகர் போன்ற சக்கரவர்த்திகளை—சேர, சோழ, பாண்டியர் போன்ற செங்கோல் மன்னர்களை—பாரதியார் போன்ற போர்க்களப் புலவர்களைப் பெற்றெடுத்ததும் இந்தியா.

ஆம்; அந்நாளில் மக்கள் இனத்தின் புகழனைத்தையும் குமரி முதல் இமயம் வரையுள்ள நிலப்பரப்பில் அடக்கிக் கொண்டு அனைத்துலகும் தன்னை நோக்கித் தவம் புரியும் பெருமை பெற்றது இந்தியா. நாடின்றி, நாகரீகமின்றி, நாடோடிகளாய்த் திரிந்துவந்த பரதேசிகளை யெல்லாம் பரிவுடனே வரவேற்றுப் பங்கு தந்ததும் இந்தியா.

அத்தகைய பெருமை பெற்ற இந்தியா, கடந்த இரு நூறு ஆண்டுகளுக்கு மேலாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்கீழ் அடிமைப்பட்டு அல்லலுற்றது. சில லட்சக் கணக்கான வெள்ளையர்கள் பலகோடி இந்திய மக்களை இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அடிமைப்படுத்தி அடக்கி ஆண்டனர்.

அந்த அடிமைத்தனத்தை—அடக்குமுறையை எதிர்த்துப் புரட்சி செய்து இந்தியா இன்று விடுதலை பெறுகிறது. ஏகாதிபத்தியம் என்னும் சிறைக் கோட்டத்தி

லிருந்து இந்திய மக்கள் இன்று விடுபடுகின்றனர். ஆகவே, இந்த நாளைத் திருநாளாகக் கொண்டாடுகின்றது இந்தியா.

இன்று கோடானுகோடி வாய்கள், 'சுதந்திர இந்தியா வாழ்க' என்று வாழ்த்துகின்றன. கோடானுகோடி கரங்கள் தேசியக் கொடிகளை ஏந்துகின்றன. "என்று தணியுமெங்கள் சுதந்திர தாகம்?" என்று ஆண்டாண்டு தோறும் அழுதுவந்த கோடானுகோடி கண்களில் இன்று இன்ப ஒளி பிரகாசிக்கக் காண்கிறோம்.

எந்தப் போலீஸ்காரரின் கரங்கள் வீரத் தொண்டர்களைத் தடிகொண்டு தாக்கியதோ, அந்தக் கரங்களில் இன்று மூவர்ணக் கொடி காட்சியளிக்கக் காண்கிறோம்.

"யூனியன் ஜாக்" கொடி இறங்கவிடாமல் பார்த்துக் கொள்ள ஏகாதிபத்தியத்தின் காவலராக இருந்த 'நை' பிரபுவின் கரங்கள் தேசியக் கொடியை ஏற்றிவைக்கக் காண்கிறோம்.

'யூனியன் ஜாக்' கொடி பறந்துவந்த அந்தக் கோட்டைக் கொடிமரத்தில் நமது தாயின் மணிக்கொடி, இந்திய உபகண்டத்தின் இன்பக் கொடி சுதந்திரக் காற்றால் ஆடிப் பட்டொளி வீசிப் பறக்கக் காண்கிறோம்.

அந்தோ! இந்தக் காட்சிகளைக் காணும் அதே நேரத்தில், அதே தேசியக்கொடியின் பட்டொளியில் கடந்த காலத் துன்பக் காட்சிகளும் நம் கண்முன்னர் தோன்றுகின்றன. அருமைத் தமிழ் மக்களே! உங்கள் அகக் கண்களால் காணுங்கள்.

அதோ, செக்கு இழுக்கின்றாரே, அவர் யார்? வீரச் சிதம்பரமன்றோ!

அதோ, ரத்த வெள்ளத்தில் கையில் கொடியுடன் விழுந்து கிடக்கின்ருனே இன்னெரு வீரன். அவன் யார்? வீரத் தியாகி திருப்பூர் குமரனன்ருே!

அதோ, தூக்குமேடையில் தொங்குவது பகவத்சிங், சுகதேவர், ராஜகுரு ஆகிய மூன்று இளஞ்சிங்கங்களின் உருவங்களன்ருே!

அதோ, கண்போன்ற நேத்தாஜி தம் கண்களில் நீர் ததும்பக் காட்சி அளிக்கின்ருர். பிறந்த நாட்டுத் தலைவர்களோடு பிணக்குக் கொண்டு பிறநாடு சென்றபோதும் தாய்நாட்டு விடுதலைக்காகப் போரிட்ட எம்தலைவா! நீர் மண்ணில் வாழ்ந்தாலும் அல்லது விண்ணில் கலந்தாலும் எம் கண்ணிலிருந்தும், கவனத்திலிருந்தும் நீர் மறைந்ததில்லை.

வீரத் தியாகிகளே! பாரத அன்னையின் விழுமிய புதல்வர்களே!! இந்தியாவின் அடிமை நிலைகண்டு அன்று நீங்கள் அழுதீர்கள். இன்று உங்களின் பிரிவாற்ருமல் சுதந்திர இந்தியா அழுகின்றது. உங்கள் சேவைக்காக சிரமேற் கரங்கூப்பி வணங்குகின்ருேம்.

இனி, கடந்தகாலக் கவலையை மறப்போம்; கண்ணீரைத் துடைப்போம். ஏனெனில் நாம் அழப் பிறந்தவர்களல்லோம்; ஆளப்பிறந்தவர்கள். எனவே, வாழ்பவர்களுக்கும் வாழ்த்துக் கூறுவோம். சுதந்திரக் கதிரவனின் ஒளியில் காட்சிதரும் தனித் தலைவர் காந்தியடிகளைக் கைகூப்பித் தொழுவோம்.

அச்சமிக்க இருட்டறையில் அடைபட்டுக் கிடந்த கோடிக்கணக்கான மக்களுக்குத் தலைமைதாங்கி சுதந்திரம் என்னும் ஆனந்தப் பெருவெளிக்கு அழைத்துவந்த அப்பெருமானைத் தலையார வணங்குகின்ருேம்; வாயார வாழ்த்துகின்ருேம்.

இன்றைய விடுதலை நாளில் பங்கு கொள்ளும் பேறு பெற்ற தேசிய வீரர்கள் அனைவரையும் வாழ்த்து கின்றோம். அவர்கள் அனைவருக்கும் இம்மலரைக் காணிக் கையாகச் செலுத்துகின்றோம்.

**சுதந்திர இந்தியா வாழ்க!**
**சோஷலிசத் தமிழக் குடியரசு வருக!**

*'தமிழ் முரசு' 15-8-1947.*

# கடலூர் மாநாடு

ஆந்திர, கேரள, கன்னட மாகாணங்களில் உள்ள கட்சிகளிடையே, அரசியல்—பொருளாதாரம் ஆகிய வற்றில் கருத்து வேற்றுமை நிறைய இருப்பினும், இன உரிமையைப் பொருத்தவரையில் எல்லாம் இணைந்தே வேலை செய்கின்றன. ஆனால், தமிழகத்தில் மட்டும் நிலைமை வேறுவிதமாக இருக்கிறது. அதற்குத் தக்க எடுத்துக் காட்டு, அண்மையில் கடலூரில் கூடிய 'திராவிடர்' மாநாடே யாகும்.

'மதராஸ் மனதே', 'சலோ மதராஸ்' என்ற கோஷங்களுடன் பதினாயிரக் கணக்கான ஆந்திரர்கள் சென்னையில் 'படையெடுப்பு' நடத்திய ஐந்து நாட்களுக்குப் பிறகு கடலூர் மாநாடு நடைபெற்றிருக்கிறதென்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். தமிழ் இனத்தவரின் தன்மானத்திற்கு ஆந்திரர் அறைகூவல் விட்ட பிறகேனும், கடலூரில் கூடிய தன்மான இயக்கத்தவருக்கு, ஆந்திரரையும் சேர்த்து 'திராவிடர்' என்று சொல்லும் மயக்கம் நீங்குமென்று பலர் எதிர்பார்த்தனர். தமிழகத்தில் தமிழரசுக் கழகத்தாரின் முயற்சியால் எங்கும் பரவிவரும் இனவுணர்ச்சியை—பிரிவினைக் கிளர்ச்சியை ஆதரித்து கடலூர் மாநாடு தீர்மானம் செய்யுமென்றுகூட எதிர் பார்த்ததுண்டு. ஏனெனில், 'திராவிடர்' என்ற பெயரால் கூடினாலும், கடலூரில் கூடியவர்கள் சுத்தத் தமிழர்கள் தானே!

ஆனால், கடலூர் திராவிட மாநாட்டின் நிகழ்ச்சிகளை, திராவிடக் கட்சியின் தினப்பதிப்பான 'விடுதலை'யில் படித்தறிந்த எவரும் வருந்தாதிருக்க முடியாது.

தமிழர் வேண்டும் அரசியல் யாது? தமிழகத்தின் எல்லைகள் யாவை? தமிழினத்தின் கட்சிகளை ஒன்றுதிரட்டுவதெப்படி?—என்பவைகளைப் பற்றிக் கடலூரில் கூடியவர்கள் சிந்தித்ததாகவே தெரியவில்லை. ஆம்; மேற்சொன்ன லட்சியங்களைப்பற்றி இத்தனை நாளும் ஓயாது முழங்கிவந்த திரு. வி. க. வின் பேச்சில்கூட அவற்றைப்பற்றிப் பிரஸ்தாபமே இல்லை.

தென்னிந்தியாவை வட இந்தியாவிலிருந்து பிரிப்பதற்கான கிளர்ச்சியில் 'திராவிடர்' அனைவரும் ஒன்றுபட வேண்டுமென்று கடலூர் மாநாடு தீர்மானித்திருக்கிறது. அதற்காக விரைவில் போராட்டம் துவக்கப் போவதாகவும் முன் அறிவிப்புக் கொடுத்திருக்கிறது. போராட்டம் துவங்குமா, துவங்காதா? என்பதைப் பற்றி நாம் கவலைப்படப்போவதில்லை. ஆனால், ஆந்திர—கேரள—கன்னட தேசிய இனங்களின் ஆதரவு பெறாத, இனியும் பெறும் என்று நம்ப முடியாத ஒரு கொள்கைக்காக, தமிழகத்தில் —தமிழர் மட்டுமே கூடிப் போர் முரசு கொட்டுவது விந்தையிலும் விந்தை! மேலும் தமிழர், வடக்கே ஆந்திரர்களிடம் போராடித் திருப்பதியையும், தெற்கே மலையாளிகளிடம் போராடி குமரிமுனையுள்பட திருவிதாங்கூர் தமிழகத்தையும் மீட்கவேண்டிய நேரம் இது. இந்த நேரத்தில், ஆந்திரர்—மலையாளிகளுக்காகப் பரிவு காட்டி, "திராவிட நாட்டுப் பிரிவினைக்காக ஒன்றுபடுங்கள்" என்று தமிழரை மட்டும் அழைப்பது தமிழினத்துக்குத் தீமை செய்வதாகாதா?

'தமிழ் நாடு தமிழருக்கே!' என்ற சிந்தனையைக்

கிளப்பியவர்கள் நாங்கள்தான் என்று, எண்ணத்திற்கு உரிமை கொண்டாடும் திராவிடக் கழகத்தார், அந்த இயக்கத்துக்குப் பாதகம் விளைவிப்பது எதனாலோ?

'திராவிடஸ்தான்' அடைய விரும்பும் திராவிடக் கழகத்தார் அதிலுள்ள சிக்கல்களைச் சிந்தித்ததாகவே தெரியவில்லை. அது மட்டுமல்ல; சிந்திக்கும்படி தூண்டுபவர்களிடமும் சீற்றம் கொள்கிறார்கள். சிந்திக்கவே மறுக்கும் ஒரு அரசியல் கட்சி தனது கோரிக்கைகளுக்குப் பிற கட்சியினர் ஆதரவு கொடுக்கவில்லையென்று அவர்களைப் பழித்துப் பேசுவது எப்படி நியாயமாகும்? இதைப்பற்றி திராவிடக் கழகத்தார்—முக்கியமாக இளைஞர்கள் இனியேனும் கவனிப்பார்களாக!

தென்னிந்திய தேசீய இனங்களின் ஒற்றுமைக்கு தமிழரில் எந்தப் பகுதியினரும், எந்தக் காலத்திலும் எதிராக இருந்ததில்லை. ஆந்திரர்தான் தமிழகத்திலிருந்து பிரிந்து போகவேண்டுமென்ற கிளர்ச்சியை முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே துவக்கினர். இன்று அக்கிளர்ச்சி தமிழரைப் பகைத்தும், பழித்தும் பேசும் அளவுக்கு வளர்ந்து வந்திருப்பதைப் பகுத்தறிவு இயக்கத்தார் அறியாதிருக்க முடியாது. ஆந்திரரையொட்டி கேரளரும், கன்னடரும் செய்துவரும் தனிஅரசுக் கிளர்ச்சியும் அனைவரும் அறிந்ததே.

இந்த நிலையில், திராவிடப் பேரரசு வேண்டுமென்று கூறுவோருக்கு, வேங்கடத்துக்கு வடக்கேதான் வேலை இருக்கின்றது; தெற்கே துளியளவும் கிடையாது. அதை விட்டு, தமிழ் நாட்டில் தமிழரின் கவனத்தைத் திராவிட இயக்கத்தின்பால் இழுப்பது, அறிந்தோ அறியாமலோ தமிழரின் நிலத்தைப் பறிக்கத் திட்டமிட்டு

வேலைசெய்யும் ஆந்திரருக்கும் கேரளருக்கும் துணை புரிவ தாகும். இது மறுக்க முடியாத உண்மை.

மேலும், 'திராவிட நாடு' என்ற விஷயத்திலும் திராவிடக் கழகத்தாருக்குள்ளேயே தெளிவான அபிப் பிராயம் இருப்பதாகத் தெரியவில்லை.

'திராவிட நாட்டின் வடக்கெல்லை விந்தியமலை' என்று தமது பேச்சில் அடிக்கடி வற்புறுத்துகின்றார், தளபதி அண்ணாத்துரை.

'இன்றுள்ள சென்னை மாகாணமே திராவிட நாடு' என்று கடலூர் திராவிடர் மாநாட்டின் தலைவர் திருவாளர் எஸ். முத்தையா அவர்கள் பேசியிருக்கிறார்.

"ஆந்திரரும், கேரளரும், கன்னடரும் ஆதரிக்கா விட்டால் தமிழ் நாட்டையே திராவிட நாடாகக் கொள் வேன்" என்கிறார் பெரியார் ஈ. வெ. ரா.

தளபதிக்கு விந்தியத்தில் இருக்கும் வடக்கெல்லை தலைவருக்கு வேங்கடம்வரை குறுகிவிடும் விந்தையை என்னென்பது! ஒரு நாட்டைப்பற்றி, அதற்குரிய எல்லை யைப்பற்றி ஒரே கட்சித் தலைவர்களுக்குள் இவ்வளவு மாறுபட்ட கருத்திருப்பது அரசியல் உலகத்தில் இதுவரை கேட்டிராத ஓர் அதிசயம்!

விந்தியமலை மத்திய மாகாணத்தில் இருக்கிறது. எனவே, விந்தியத்தைத் திராவிடநாட்டின் வடக்கெல்லை யாகக் கொள்வதாயின், மகாராஷ்டிர, மகாகோசல தேசீய இனங்கள் திராவிடஸ்தானுக்கு ஆதரவு காட்டியாக வேண்டும். ஆனால், இன்றுள்ள நிலையில் அவர்கள் இந்தப் பிரச்னையைப் பற்றி அறியவேமாட்டார்கள். எனவே, விந்தியத்தை வடக்கெல்லையாகக் காட்டுவது சிக்கலை அதிகப்படுத்துகிறதே ஒழிய சீர்படுத்தவில்லை,

'சென்னை மாகாணம்தான் திராவிட நாடு' என்பவர்கள், தென்னிந்திய தேசிய இனங்களின் சுதந்திரக் கோரிக்கையை அறியாதவர்களாகின்றனர்.

ஆந்திரர் கோரும் விசால ஆந்திரத்தில் ஒரிசாவில் உள்ள கஞ்சம் ஜில்லாவும், ஹைதராபாத்தில் சரிபாதியான 'தெலிங்கானு'வும் அடங்கியுள்ளன.

கேரளர் கேட்கும் ஐக்கிய கேரளத்தில், திருவிதாங்கூர், கொச்சி ஆகிய சமஸ்தானங்களின் மலையாளப் பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஐக்கிய கேரளத்தில் இணைய கொச்சி சம்மதித்து விட்டது. சி. பி.யை வெளியேற்றிய திருவிதாங்கூரும் விரைவில் சம்மதிக்கும் என்பதில் ஐயமில்லை.

கன்னடர் கோரும் சம்யுக்த கன்னடத்தில் மைசூர் சமஸ்தானமும், பம்பாய் மாகாணத்திலும் ஹைதராபாத் சமஸ்தானத்திலுமுள்ள கன்னடப் பகுதிகளும் கலந்தே இருக்கின்றன.

அப்படியே, தமிழர் கோரும் புதிய தமிழகத்திலும் திருவிதாங்கூர் தமிழகம், பிரெஞ்சுத் தமிழகம், புதுக்கோட்டை சமஸ்தானம் ஆகியவை சேர்ந்து இருக்கின்றன. தமிழகத்தோடு சேர வேண்டுமென்ற கிளர்ச்சியும் அந்தப் பிரதேசங்களில் தலைதூக்கி நிற்கின்றது.

இவ்வாறு தென்னிந்திய தேசிய இனங்கள் வரையறுக்கும் எல்லைகளுக்கு மாறுபட்ட வகையில், 'சென்னை மாகாணம் மட்டுமே திராவிடநாடு' என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? மொழிவழி மாகாணப் பிரிவினையைத் திராவிடக் கழகம் ஏற்பது உண்மையானால், அந்த மாகாணங்களின் எல்லைப் பிரச்னையை மட்டும் புறக்கணிப்பது எப்படி நியாயமாகும்?

தெலிங்கானுவில் ஆந்திரர் அல்லற்படுகின்றனர். கன்னடத்தில் அடக்குமுறை பேய்க்கூத்தாடுகின்றது. பிரெஞ்சுத் தமிழகத்தில் கொலையும் கொள்ளையும் அன்ருடக் காட்சிகளாகி வருகின்றன. அங்கெல்லாம் 'திராவிட' மக்கள்தானே அல்லற்படுகின்றனர்? அவர்களுக்கு ஆதரவு காட்டுவதன் மூலம், திர்ராவிடஸ்தானுக்கு ஆதரவு தேட முயன்று பார்க்கலாமல்லவா? ஆனல், திராவிடக் கழகத்தார், அவர்களுக்கெல்லாம் ஆதரவு காட்டவில்லை என்பது மட்டுமல்ல; ஆந்திர தேசீய இனத்தவரின் கருத்துக்கு மாருக, ஹைதராபாத் சமஸ்தானம் தனி நாடாவதை அங்கீகரித்தனர். மலையாளத் திருவிதாங்கூர் விஷயத்திலும் அப்படியே செய்தனர். இன்றும் பெரும்பாலும் கன்னடரே வாழும் மைசூரில், கன்னடர் வெறுத்துத் தள்ளிய போலிச் சீர்திருத்தங்களுக்கு திராவிடர் தலைவர்கள் புகழ்மாலை சூட்டுகின்றனர். இம்மாதிரி நடந்துகொள்ளும் ஒரு கட்சியை, ஆந்திர-கேரள-கன்னட மக்கள் எப்படி ஆதரிப்பார்கள்?

"ஆந்திரர், கேரளர், கன்னடர் ஆதரிக்காத நிலை ஏற்பட்டால் தமிழ்நாடே திராவிட நாடாகும்" என்ற கூற்று இதைவிட வேடிக்கையானது. ஏடுகளிலுள்ளபடி வைத்துக்கொண்டால்கூட, நான்கு இனங்களும் சேரும் போதுதான், அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் உறவுகொள்ளும்போதுதான் 'திராவிடர்' என்ற வார்த்தை பொருள் பொதிந்ததாகிறது. அப்படிச் சேராதபோது தமிழ்நாடு தமிழ் நாடாகத்தான் இருக்க முடியுமே தவிர, அதைத் 'திராவிடநாடு' என்பது பொருளற்ற பேச்சு. இதைத் தெரிந்துகொள்ள அரசியல் ஞானம் அதிகம் தேவை இல்லை.

ஏடுகளிலுள்ள கலாச்சார வரலாற்றின் அடிப்படையில் ஆரியர் - திராவிடர் பிரிவினை வேண்டுமென்போர்,

அந்த ஏடுகள் கூறும் இன இலக்கணங்கள் இன்று மாறு பட்டுள்ளன என்பதை ஏற்க மறுப்பது எதனுலோ?

ஆந்திர மொழியின் வளம், ஆந்திரரின் பழக்க வழக் கங்கள் ஆகியவை 2000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த தைப்போல் இன்று இருக்கவில்லை. இடைப்பட்ட இந்த 2000 ஆண்டுகளில் அவை ஒவ்வொரு துறையிலும் தமிழ கத்திலிருந்து விடை பெற்றுக்கொண்டு வடமொழியோடு, வட நாட்டுப் பண்போடு உறவு கொண்டுவிட்டன. தமிழ கத்தில் வடமொழிச் சொற்களே இல்லாத, அல்லது வட மொழிச் சொற்கள் மிகக் குறைவாக உடைய தமிழ் நூலையே நாம் நல்ல தமிழ் நூல் என்று போற்றி வளர்க் கிறோம். அதற்கு நேர்மாருக ஆந்திரர், எவ்வளவுக்கெவ் வளவு வடமொழிச் சொற்கள் அதிகமாகக் கலந்துள்ள னவோ, அந்தத் தெலுங்கு நூலைத்தான் நல்ல இலக்கியமாக எண்ணிப் பெருமைப்படுகின்றனர். பண்பாட்டிலும் அப் படியே. எனவே, வட மொழியை வெறுக்கும்—வட மொழிச் சொற்களைக் கலைச்சொற்பட்டியலில் கலப்பதும் கூடாது என்று உணர்ச்சி கொண்டு கிளர்ச்சி செய்யும் திராவிடர் கழகத்தார், வட மொழியோடு, 'வடவர் பண் போ'டு நாளுக்குநாள் அதிகமாகக் கலந்து வரும் ஆந்திர ரோடு தமிழரையும் ஒன்ருக்கி, 'ஒரே இனம்' என்று பேசுவது பொருந்துமா? கேரளர்—கன்னடர் நிலைமையும் ஆந்திரரைப் போன்றதுதானே!

இந்த நிலையில் சட்டசபை, மந்திரி சபையோடு கூடிய ஒரே அரசின் கீழ், பிற இனங்களோடு தமிழினத்தார் இணைந்து வாழவேண்டும் என்று கூறுவோர், மேலே நாம் எடுத்துக் காட்டிய சிக்கல்களைச் சிந்திக்க வேண்டும். ஏன்? இன்றைய சென்னை அரசாங்கத்தின் அனுபவமும் நமது கருத்துக்கு அரண் செய்கின்றதே!

வாதத்திற்காக திராவிடஸ்தான் அடைய முடியும் என்று வைத்துக்கொண்டாலும், அந்தத் 'திராவிட அரசி'ல் தமிழர் நிலை எதுவாயிருக்கும் என்று நினைக்கின்ற போது நமது நெஞ்சு திடுக்கிடுகின்றது. மேலே நாம் எடுத்துக்காட்டியவாறு விசால ஆந்திரம், ஐக்கிய கேரளம், சம்யுக்த கன்னடம், புதிய தமிழகம் ஆகியவை அவ்வவற்றிற்குரிய நியாயமான எல்லைகளோடு அமைந்து, அவை அனைத்தும் கொண்ட திராவிடநாடு உருவாகுமானால், அதன் மக்கள் தொகை சுமார் பத்து கோடியாகும். அதில், தமிழர்கள் மூன்று கோடிக்கும் குறைவாகவே இருப்பர். எனவே, திராவிட அசெம்பிளியில், அரசாங்கத்தில் தமிழர் சிறுபான்மையினராகவே இருக்க நேரும். தனித்தனி இனமாக நோக்கும்போதுகூட ஆந்திரரே ஜனத்தொகையில் பெரும்பான்மையினர்; கட்டுப்பாடு வாய்ந்தவரும்கூட. அந்நிலையில், தமிழர்நிலை ஆந்திரரின் நல்லெண்ணத்துக்கு அடிபணிந்து நிற்பதைத் தவிர வேறு எதுவாயிருக்க முடியும்? திராவிட நாட்டை ஆளப் போவது யார் என்பதற்குச் சான்று வேண்டுமானால், ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் பானகல் அரசர், பொப்பிலி அரசர், முனிசாமி நாயுடு ஆகிய ஆந்திரரைத் தவிர வேறு ஒரு தமிழரும் தலைமை அமைச்சர் பதவியை அடைய முடியாமல் போய்விட்டதென்பதை நினைவூட்டுகிறோம்.

அதுமட்டுமல்ல; திராவிட அசெம்பிளியும் அரசாங்கமும் எந்த மொழியில் நடக்கும் என்பதைத் திராவிடர் கழகத்தார் இதுவரையில் தெளிவுபடுத்தினார்களில்லை. தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மூன்றுக்கும் தாய் மொழியாகிய தமிழிலா நடக்கும்? அது ஒரு போதும் இருக்காது! அந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளுவோருக்கு அரியாசனமும் கிடைக்காது என்பது திண்ணம். திராவிட நாட்டின் ஜனத்தொகையில் தனித்தனி மொழியினராக நோக்கும்போது, தெலுங்கு பேசுவோரே அதிகமாகையால்

திராவிட நாட்டின் அரசியல் மொழி தெலுங்காக அமைவது இயற்கை.

'தெலுங்கும் வேண்டாம், தமிழும் வேண்டாம்; ஆங்கிலத்தைப் பொதுமொழி யாக்கலாம்' என்று திராவிடர் கழகத்தின் ஆங்கில அறிஞர்கள் கூறலாம். இந்தக் கூற்றுக்கு தமிழ் நாட்டைத் தவிர, மற்ற மூன்று மாகாணங்களிலும் ஆதரவு கிடைக்காதென்பது உறுதி. ஒரு வேளை, மற்ற மூன்று இனத்தாரும் சேர்ந்து இந்தியைப் பொது மொழியாக ஏற்பார்களே ஒழிய, தமிழைத் தலைகாட்ட விடமாட்டார்கள். திராவிடர் கழகம் எதிர்க்கும் இந்தியை அவர்கள் ஒருமுகமாக ஆதரிப்பதே இதற்குத் தக்க சான்று.

திராவிடர் கழகத்தாரைக் கேட்கிறோம்: தெலுங்கை, இந்தியை, அல்லது ஆங்கிலத்தை அரியாசனத்தில் ஏற்றி வைத்து, நம் கன்னித் தமிழ் அதன் கால்பிடித்து வாழவா திராவிடஸ்தான் கோருகிறீர்கள்? சிற்றமின்றிச் சிந்தியுங்கள், உண்மை விளங்கும்.

தமிழரசுக் கழகத்தின் சார்பில் கூறுகிறோம்: திராவிடர் கழகத்திற்கும் நமக்கும் நாட்டுப் பிரிவினையில் வேற்றுமை இருக்கிறது. நாம் வேண்டுவது வேங்கடம் வரையிலுள்ள தமிழகப் பிரிவினை. அந்தத் தனித் தமிழகம் தமிழரசு நடாத்தும். அந்தத் தமிழரசில் தனி உடைமையைச் சாய்த்து, சுரண்டலற்ற சோஷலிசம் செங்கோலோச்சும். பிறந்த காலமறியாத, முதுமைக் கோலம் காணாத எங்கள் கன்னித் தமிழ் அன்னை ஆட்சி புரிவாள். அதுதான் நாம் காண விரும்பும் இன்பத் தமிழகம்.

இந்த நிலையைத் தமிழர் அடையாதவாறு தடுப்பதாக இருக்கின்றது, திராவிடர் கழகத்தாரின் போக்கு என்பதைத் தமிழ் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—'தமிழ் முரசு' *1-10-1947.*

# தமிழரசு மாநாடு

மாநில தமிழரசுக் கழக முதல்மாநாடு இம்மாதம் ஒன் பதாம் தேதி சென்னை நகரில் நடைபெற இருக்கிறது.

தமிழரசு மாநாடு கூடுவதன் நோக்கமென்ன? குமரி முதல் வேங்கடம் வரையிலுள்ள புதிய தமிழகத்தை உருவாக்கும் கிளர்ச்சிக்குத் திட்டமிடுவதா? ஆம், தமிழகப் பிரிவினை, துண்டுபட்ட தமிழ் நிலங்களை ஒன்றுபடுத்தல் ஆகிய திட்டங்கள் மாநாட்டின் முன்னர் வருவது திண்ணம். எனினும், மாநாடு கூடுவது அதற்காகமட்டு மல்ல! தமிழகத்தைத் தனி மாகாணமாக்கி விடுவதாலோ, இழந்த எல்லைகளை மீட்டு விடுவதாலோ சுதந்தர இந்தியா வில் தமிழினத்தாருக்கு சுகவாழ்வு தேடிவிட்டதாகாது. தமிழினத்தார் சிறந்து வாழ, தமிழகம் செழிப்புடன் விளங்க, தமிழகத்தில் சோஷலிசத் தமிழ்க்குடியரசு அமைய வேண்டும். இதுதான் தமிழரசுக் கழகத்தின் உயிர் நாடியான கொள்கை. இந்தக் கொள்கைக்கு ஆக் கம் தேடவே தமிழரசு மாநாடு கூடுகிறது.

தமிழகப் பிரிவினை, தலைநகர் பாதுகாப்பு, குமரி— வேங்கடத்தை மீட்டல் ஆகியவை யெல்லாம் மேற் சொன்ன சோஷலிசத் தமிழ் அரசு அடைவதற்கான நடைமுறைத் திட்டங்களிலே சிலவாகும்.

"எல்லைக் கிளர்ச்சியோடு நின்றுவிட்டாலென்ன ?" என்று அறிவுரை கூறுகின்றனர் சிலர். எல்லைக் கிளர்ச்சி வெற்றி பெறுவதால் சில ஆயிரக் கணக்கான சதுரமைல் கள் தமிழகத்தோடு இணைக்கப்படலாம். தலைநகரமான

சென்னை பாதுகாக்கப்படலாம். ஆனால், தமிழகத்தின் நிலப்பரப்பு பெருகி விடுவதனால் மட்டும் அதிலுள்ள மக்கள் வளத்துடன் வாழ்ந்து விட முடியாது. தமிழகத்தின் வளத்தைப் பிற இனத்தார் சுரண்டிச் செல்லும் "பகற் கொள்ளை" போன்ற பாதகச் செயல்கள் தடுக்கப்பட வேண்டும். தமிழகத்தின் அரசியல் பிற இனத்தவரின் தலையீடின்றி நடைபெற வேண்டும். அதற்காகத்தான் நாம் தமிழரசு கேட்கிறோம்; அதை அமைக்கும் சுய நிர்ணய உரிமை கோருகிறோம். வேண்டுவது பிற இனத்தவர் மீது கொண்ட பகைமையினாலல்ல; நமக்குள்ள உரிமையினால்.

தமிழரசுக் கழகம் வேண்டுவது வெறும் தமிழரசு மட்டுமல்ல; சுரண்டலுக்கு இடமற்ற சோஷலிச அரசாகும். 'தமிழன்' என்ற இன உணர்ச்சியை மட்டும் எழுப்பி தமிழகத்தின் பண மூட்டைகள், பதவி வேட்டையாளர்கள் தலைமையின் கீழ் மக்களைத் திரட்டுவது கழகத்தின் கருத்தல்ல. 'சுதந்திரம்' என்ற தூய்மையான உணர்ச்சியை ஊட்டி 'சோஷலிசம்' என்ற சுகவாழ்வுக்குத் தமிழர்களை அழைத்துச் செல்லவே கழகம் பாடுபடுகிறது. அதனாற்றான், சுதந்திர இந்தியாவில் சோஷலிசத் தமிழரசு என்ற சொற்றொடரை ஒவ்வொரு கட்டத்திலும் ஒளிவு மறைவின்றி அழுத்தந் திருத்தமாக கழகம் வற்புறுத்தி வந்திருக்கிறது. சுருங்கச் சொன்னால், எந்தப் புதிய தமிழகத்தை உருவாக்கக் கழகம் பாடுபடுகிறதோ, அந்தப் புதிய தமிழகத்தில் சுரண்டல் கொள்கை எந்த உருவத்திலும் இல்லாது ஒழிக்கப்படவேண்டும் என்பதே தமிழரசுக் கழகத்தின் தலையாய கொள்கை.

'சோஷலிசம்' என்று சொல்லும்போது, இடதுசாரிக் கட்சிகளிடையே தோன்றியுள்ள, ஒன்றோடொன்று

முரண்பட்ட பல்வேறு கருத்துக்கள் அல்லது தத்துவ விளக்கங்கள் நம்மைத் திகைக்க வைக்கின்றன. என்றாலும், தமிழரசுக் கழகத்தைப் பொறுத்த வரையில் விஞ்ஞான ரீதியான சோஷலிசத்தை ஜனநாயக முறையில் கொண்டு வரவே விரும்புகிறது. ஆம், கழகம் வேண்டுவது, 'ஜன நாயக சோஷலிசம்'! இந்தக் கொள்கையை தமிழரசுக் கழகம் தனித்து நின்றும், அவசியமானபோது பிற இடது சாரிக் கட்சிகளோடு ஸ்தாபன ரீதியாக இணைந்து நின்றும் நிறைவேற்றவே விரும்புகிறது.

தமிழரசுக் கழகம், கடந்த ஓராண்டாக தனது கொள்கைக் கேற்ப மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வந்துள்ளது. குமரி முதல் வேங்கடம் வரை உள்ள நிலப் பரப்பு முழுவதிலும் தனது கோரிக்கையை வெகுவாகப் பரப்பியுள்ளது. 'தமிழர்', 'தமிழ்நாடு' என்பதெல்லாம் 'குறுகிய புத்தி' எனக் கூறியவர்களின் வட்டாரத் திலேயே, 'தமிழர் தனி இனம்', 'தமிழகம் தனி நாடு', 'தமிழகத்தில் தனியரசு', 'தமிழருக்கும் சுய நிர்ணயம்' என்ற ஒலிகளை எழுப்பி வந்தது; அவற்றை ஏற்கும் படியும் செய்து விட்டது.

தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டி
தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி
திருமங்கலம் தாலுகா காங்கிரஸ் மாநாடு
தமிழ் எழுத்தாளர் மாநாடு
தமிழாசிரியர் மாநாடு
சென்னை மாகாணத் தமிழர் சங்க மாநாடு
தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர் மாநாடு
சென்னை ஜில்லா காங்கிரஸ் அரசியல் மாநாடு
சென்னை ஜில்லா காங்கிரஸ் ஊழியர் மாநாடு

ஆகிய பல்வேறு கமிட்டிகளும், மாநாடுகளும் தமிழரசுக் கழகக் கோரிக்கைகளை எதிரொலி செய்துள்ளன. குறைந்த காலப் பிரசாரத்தில் கழகம் அடைந்துள்ள மகத்தான வெற்றிக்கு இவையனைத்தும் தக்க சான்றுகளாகும்.

சென்னை அசெம்பிளி, மேல் சபை ஆகியவற்றில் மொழிவாரி மாகாணப் பிரிவினை பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத் தீர்மானம் மொழிவாரி மாகாணக் கிளர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டதாக 'விடுதலை' வியாக்கியானம் செய்கிறது. கட்சிச் சுய நலம் அதிகப்பட்டுவிட்டால் கருத்து குழம்பிவிடும் என்பதற்கு இதுவே தக்க சான்று.

சட்டசபைத் தீர்மானம் மாகாணப் பிரிவினையை வற்புறுத்தியதே ஒழிய மாகாண எல்லைகள் இதுவென விளக்கவில்லை. மேலும், மாகாணப் பிரிவினை வேண்டுமென்று அரசியல் நிர்ணய சபைக்கு வேண்டுகோள் அனுப்பியதே யொழிய, இத்தனை மாதங்களுக்குள் பிரித்தாக வேண்டுமென்று அம் மன்றத்திற்கு ஆணை பிறப்பிக்கவில்லை; பிறப்பிக்கவும் முடியாது. எனவே, வெறும் வேண்டுகோள் அனுப்பியதினாலேயே மாகாணப் பிரிவினை உடனடியாக ஏற்பட்டுவிடுமென்றோ, குமரி—வேங்கட நிலப்பரப்பில் சோஷலிச அரசு அமைந்து விடுமென்றோ நம்புமளவுக்கு தமிழரசுக் கழகத்தின் அரசியல் ஞானம் மட்டரகமானதல்ல. மேலும், சென்னை சட்டசபையினர் மாகாணப் பிரிவினையில் மட்டும் அக்கறை காட்டினரே யொழிய, பிரிக்கப்பட்ட மாகாணங்களின் அரசியல்-பொருளாதார சுதந்திரங்களைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. எனவே, தமிழரசுக் கழகம் இனியும் தனது கொள்கையை நாட்டில் பரப்ப வேண்டுவது அவசியமும் அவசரமும் ஆகும்.

இம்மாநாடு, தமிழினத்தின் வரலாற்றிலேயே புதுமை வாய்ந்தது; புரட்சிகரமானது. தமிழின் பெயரால், தமிழர் பெயரால் கூடிய மாநாடுகள் எத்தனையோ உண்டு. அவற்றால் சில நன்மைகளும் விளைந்ததுண்டு. ஆனால், இன உணர்ச்சியின் அடிப்படையில், உரிமைக்கு வேங்கடத்தை எல்லையாக்கி, உறவுக்கு இமயம் வரை செல்வோம் என உறுதிகூறி, சுதந்திரம்—சுயநிர்ணயம்—சோஷலிசம் என்ற கோஷங்களைக் கிளப்பும் முதல் மாநாடு இதுவேயாகும். அது மட்டுமல்ல; காலத்தை யொட்டியும், கடந்த கால சுதந்திரப் போரில் கடமையைச் செய்தவர்களாலும் இந்த உரிமைக் கோஷங்கள் எழுப்பப்படுவதால் நாட்டில் உள்ள முற்போக்கு சக்திகளின் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. கடந்த சில மாதங்களுக்குள் தமிழரசுக் கழகம் பல அரிய பணிகளைச் செய்ய முடிந்ததற்கும் இந்த முற்போக்குச் சக்திகளின் துணையே முதற்காரணம். எனவே, தமிழரசு மாநாடு ஒரு தனி ஸ்தாபனத்தின் மாநாடாயினும், அதன் நடவடிக்கைகளும் தீர்மானங்களும் முற்போக்குச் சக்திகளின் ஆதரவைப் பெறும் வகையில் அமைய வேண்டும்.

சாதிப் பாகுபாட்டில் நம்பிக்கையற்றது தமிழரசுக் கழகம். சமூக வாழ்வைச் சீர்குலைக்கும் வகையில் உள்ள சமயக் கொள்கைகளையும் கழகம் இதுவரை ஏற்றதில்லை; இனியும் ஏற்கப்போவதில்லை. எனவே, தமிழரசு மாநாடு, அரசியல்—பொருளாதார உரிமைகளை அடைய வழி காட்டுவதோடு நில்லாது, சாதி—சமயம்—சாத்திரம் என்ற பெயரால் நிலவிவரும் மூட நம்பிக்கைகளை, சமூக ஊழல்களை ஒழிக்கவும் திட்டமிட வேண்டும்.

அரசியல் நிர்ணய மன்றத்தார் தயாரித்துள்ள புதிய அரசியல் நகலானது கடந்தகால ஏகாதிபத்திய இந்தியா

வில் அமுலிலிருந்த அரசியலின் நகல் போன்றதாகும். ஆங்கில ஆதிக்கம் அகன்றதும், வயது வந்தோருக்கு வாக்குரிமை தந்ததும் தவிர வேறு புதிய அம்சங்கள் எதுவும் அதில் இல்லை. இத்தகைய பிற்போக்கான அரசியல் திட்டம் தமிழர் மீது திணிக்கப்படுமானால், தமிழர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் மாநாட்டுப் பிரதிநிதிகள் முடிவு செய்தாக வேண்டும்.

பொதுவாக, தமிழரசுக் கழகம் கடந்த ஓராண்டில் பெற்ற ஆற்றலையும், ஆதரவையும், அனுபவத்தையும் வைத்துக்கொண்டு வருங்காலத்தில் மேற்கொண்டு முன்னேறுவதற்கான திட்டங்களை மாநாடு வகுக்குமென்று நம்புகின்றோம்.

*—'தமிழ் முரசு' 1-11-1947.*

# கோவை மாநாடு

அடுத்த ஜனவரி முதல் வாரத்தில் கோவையில் தமிழ் நாடு காங்கிரஸ் மாநாடு கூடப்போகின்றது. அந்நிய ஆட்சியை வெளியேற்றிய பிறகு முதன்முதல் கூடும் மாகாண காங்கிரஸ் மாநாடு இதுவே. எனவே, இதில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளின் பொறுப்பு மகத்தானது.

காங்கிரஸ் மகாசபை இனியும் தேவையா? தேவையானல், அதன் அமைப்பு இப்போதுள்ளது போன்றது தானு? மற்றும், அதன் வருங்கால வேலைத்திட்டங்கள் யாவை? என்பவைகளைப் பற்றி எல்லாம் கோவை மாநாட்டில் ஆலோசித்து முடிவு கட்ட வேண்டும்.

ஆங்கில ஆதிக்கத்தை வெளியேற்றவே காங்கிரஸ் தோன்றியது. எனவே, ஆகஸ்டு 15-ல் அந்நிய ஆட்சி மறைந்த நேரத்தோடு காங்கிரசின் அவசியமும் குறைந்து போயிற்று. ஆதலால், "ஆகஸ்டு 15-க்குப் பிறகு காங்கிரஸ் வேண்டுமா?" என்ற கேள்வி பிறப்பதும், "வேண்டாம்!" என்று காங்கிரசிலேயே ஒரு சாரார் அபிப்பிராயப்படுவதும் இயல்பே.

காங்கிரஸ் தலைமையினர் இனியும் அந்த ஸ்தாபனத்தைத் தொடர்ந்து நடத்துவதென்ற முடிவுக்கு வந்து விட்டனர். அதற்கான காரணங்களை அவர்கள் திட்ட வட்டமாகத் தெரிவிக்கவில்லை. என்றாலும், நம்மைப் பொறுத்த வரையில், காங்கிரஸ் அமைப்பு மேலும் நீடித்து இருப்பதற்கு ஒரே காரணந்தான் இருக்க முடி

யும். அதாவது, அதிகாரம் கைமாறிய நேரத்தில் அனுபவமும் ஆற்றலும் மிக்க தலைவர்கள், அல்லது அத்தகைய தலைவர்களைக் கொண்ட கட்சியினர் சிறிது காலம் ஆட்சி புரியவேண்டும் என்பதேயாகும்.

மேற்சொன்ன காரணத்திற்காக காங்கிரஸ் இனியும் இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வருவதாயின், அந்த முடிவு நாட்டிலுள்ள முற்போக்குக் கட்சியினராலும் வரவேற்கப்பட வழிசெய்ய வேண்டும். இல்லையேல், நாட்டில் கட்சிகளுக்குள் போட்டியும், பொய்ப் பிரசாரமும் மலிந்து மக்களின் அன்றாட வாழ்வைப் பாதிக்கும் அளவுக்கு அமைதி குலைந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

'ஒரே கட்சி', 'ஒரே தலைவர்', 'ஒரே கொடி' என்ற கோஷங்கள் அல்லது கொள்கைகள், அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட காலத்திற்குத்தான் பொருந்தும். இது, அரசுரிமை பெற்று ஆக்க வேலைத் திட்டங்களை தயாரித்து மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தீர்ப்பளிக்கும் காலம். இப்போது 'ஒரே கட்சி' மனப்பான்மையை வளர்ப்பது பாசிஸமேயொழிய ஜனநாயகமல்ல. அந்தப் பாசிஸ முறையை காங்கிரஸ் கடைப்பிடிக்காது என்பதில் நமக்கு நம்பிக்கையுண்டு. ஏனெனில், துன்பமொன்றே அதன் எதிர் நின்ற காலத்திலும், தியாகத் தீயில் அதன் தொண்டர்கள் துள்ளிக் குதித்த நேரத்திலும் அது ஜனநாயகப் பாதையை விட்டு விலகியதில்லை. இது, அதன் கடந்த கால வரலாறு.

இனி, வருங்காலத்திலும் காங்கிரஸ் ஜனநாயகப் பாதையில் செல்லுமென்றே நம்புகின்றோம். பணமூட்டைகளில், சாதிப் பித்தர்களில், மதவெறியர்களில் ஒரு சிலர் அந்தப் புனித ஸ்தாபனத்தில்—அதன் வீரர் குழுவில்—மறைந்து வாழ்வதை நாம் மறக்கவில்லை,

என்றாலும், காங்கிரசிலுள்ள தியாகத்திற்கு அஞ்சாத தீரத் தொண்டர்கள் இந்தப் பிற்போக்கு சக்திகளை ஸ்தாபனத்திலிருந்து விரட்டியடிக்க வேலை செய்து வருகின்றனர் என்பதை நாம் நன்கறிவோம். அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதிலும் நமக்குத் தளராத நம்பிக்கையுண்டு.

காங்கிரஸ் தேசீய ஸ்தாபனமாக அல்லாமல் ஒரு பார்லிமெண்டரிக் கட்சியாக இருந்து வருவதை ஜனநாயக புத்தியுள்ள எவரும் ஆட்சேபிக்க முடியாது.

சட்ட ரீதியில் செல்லும் பார்லிமெண்டரிக் கட்சியாக காங்கிரஸ் வேலை செய்வதானாலும்கூட, அதன் அமைப்பில் பெருத்த அளவுக்கு மாறுதல் செய்யப்பட வேண்டும். குறிப்பாக, எடுத்ததற்கெல்லாம் தலைமையினர் உத்தரவு அனுப்புவதென்ற வழக்கமும், சிறிய காரியங்களுக்குக் கூட 'பெரிய' இடத்துத் தயவுக்கு கையேந்துவதென்ற மாகாணத் தலைவர்களின் மனப்பான்மையும் அடியோடு மறைய வேண்டும். இந்த வழக்கத்தால்தான் மாகாணத்தில் காங்கிரசுக்குள்ளேயே பூசலும் பொறாமையும் போராட்டமும் அதிகரிக்கின்றன. மாகாணத் தலைமையினர், மேலிடத்து உத்தரவு தங்களது அதிகார மோகத்துக்கு ஆதரவாக இல்லாவிடின் அதை எதிர்க்க மாகாண உணர்ச்சியைக் கிளப்புகின்றனர். அதே தலைவர்கள் தங்களுக்கு வேண்டியபோது மட்டும் அற்ப விஷயங்களுக்குக்கூட மேலிடத்தாரிடம் யோசனை கேட்கத் தாமே வலியச் செல்லுகின்றனர். அதை எதிர்த்துக் கேட்டால் 'தேசீயம்' பேசுகின்றனர். மேலிடத்தார் தலையீட்டால் மாகாணத்தில் கட்சிப் பூசல் வலுக்கின்றதேயொழிய குறையவில்லை.

மேலிடத்துத் தலையீடு பெரும்பாலான சமயங்களில் மாகாண மக்களின் கருத்துக்கு மாறாகவே இருப்பதுடன்,

மாகாணத்தின் செல்வ நிலைமையையும் சீரழித்து விடுகின்றது. ஜமீன்—இனும் ஒழிப்பு மசோதாவில் மேலிடத்துத் தலையிட்டால் நஷ்ட ஈட்டுத் தொகை இரட்டிப்பாக உயர்ந்ததை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். இதுமட்டுமல்ல; இன்னும் எத்தனையோ சான்றுகள் கூறமுடியும். சென்றதை மறப்போம். வருங்காலத்திலேனும் இந்தச் சீர்கெட்ட வழியிலிருந்து மீண்டு, தமிழகம் சிறப்படைய கோவை மாநாடு வழி காட்டட்டும்.

தமிழரசுக் கழகத்தாரைப் பொறுத்த வரையில், வேங்கடத்துக்கு வெளியே யிருந்து உத்தரவு பெறும் கட்சிகளாலோ, அல்லது வேங்கடத்துக்கு வெளியே தாயகத்தின் எல்லை இருப்பதாக—தமிழினத்தின் ரத்தம் பாய்வதாக—தமிழ் இனத்தின் பண்பாடு பரவியிருப்பதாக நம்புகிறவர்களாலோ தமிழகம் சீரடையாது என்பது நமது திடமான நம்பிக்கை. என்றாலும், தமிழ்நாடு காங்கிரஸ் தமிழினத்தின் உரிமைக்கும் பெருமைக்கும் தீங்கற்ற வகையில் அகில இந்திய காங்கிரஸோடு இணைந்திருக்க விரும்பினால் அதற்குக் குறுக்கே இருக்க நாம் விரும்பவில்லை. அதன் விளைவுகளைப் பொறுத்திருந்து பார்ப்போம். அதனால் தீமை யுண்டாவதாயின் அதைத் தடுக்க, தமிழரசுக் கழகம் தளராது பாடுபடும். என்றாலும், தமிழினத்துக்குக் கேடுவராத வகையில் காங்கிரஸ் வேலை செய்யவேண்டுமானால், அதன் அமைப்பில் உடனடியாக மாற்றம் காணவேண்டும். மாகாண எல்லைக்குட்பட்ட எல்லா பார்லிமெண்டரி வேலைகளையும் மேலிடத்தின் அனுமதியைக் கோராது மாகாணக் கமிட்டியே செய்து கொள்ள உரிமை இருக்க வேண்டும். மாகாண நிர்வாகத்தார், தனிப்பட்ட விருப்பு வெறுப்பு காரணமாக ஏவருக்கேனும் தீங்கு செய்யின், அதைப்பற்றி விசாரித்

துத் தீர்ப்புக்கூற கட்சிப் பற்றற்றவர் அடங்கிய நீதி மன்றம் ஒன்றை மேலிடத்தார் அமைத்துக் கொடுக்கலாம். இதைத் தவிர, மாகாணக் கமிட்டிக்கும் மத்திய கமிட்டிக்கும் உள்ள தொடர்பு வெறும் சம்பிரதாய அளவுக்கு இருக்கவேண்டுமே யொழிய, சட்ட பூர்வமாகப் பிணைக்கப்படக் கூடாது. இங்கிலாந்து போன்ற நாடுகளிலுள்ள அரசியல் கட்சிகளின் விதிகளைக் காட்டி நமது திட்டத்தைக் குறை கூறலாம். இந்தியரனைவரும் பிரிட்டிஷாரைப் போன்று மொழி, பண்பாடு, மனப்பாங்கு ஆகியவற்றில் ஒரே இனத்தவரன்று. ஆகவே, நாம் சொன்ன வகையில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியை ஒரு பூரண சுதந்திர முள்ள அமைப்பாக மாற்ற கோவை மாநாட்டினர் முயற்சி செய்ய வேண்டும்.

தமிழ்நாடு காங்கிரஸ், மேலிடத்திலிருந்து 'சுதந்திரம்' பெற்றுவிட்டால் மட்டும் போதாது. காங்கிரஸ் இன்றுள்ள நிலையில், அதன் கடந்த கால வேலைத் திட்டங்களில் பல காலாவதியாகிவிட்டன. சான்ருக, மது விலக்கு, ஆலயப் பிரவேசம் ஆகியவை அமுலுக்கு வந்து விட்டன. மற்றும் அடிப்படைக்கல்வி, குடிசைத் தொழில் வளர்ச்சி, கதர் அபிவிருத்தி போன்ற நிர்மாணத் திட்டங்களும் அரசாங்கத் திட்டங்களாகி விட்டன. இனி, காங்கிரஸ் உயிர்வாழ வேண்டுமானுல், அதற்குப் புதிய திட்டங்கள் தேவை. அத்தகைய திட்டங்களை வகுப்பு உணர்ச்சியால் பாதிக்கப்பட்டு, பண மூட்டைகளின் முற்றுகைக்குள் சிக்கிச் சிறைப்பட்டுள்ள மேலிடத்தாரிடமிருந்து எதிர்பார்க்கக் கூடாது. மேலும், அங்கிருந்து கிடைக்கும் திட்டம் தமிழ் இனத்திற்கு, தமிழர் பண்பாட்டிற்குப் பொருந்தியதாகவும் இருப்பது அரிது. இது நமது கடந்தகால அனுபவம்.

எனவே, கோவை மாநாட்டினர் தமிழ் வழிப்பட்ட— தமிழ் இனத்திற்கு வாழ்வளிக்கக்கூடிய வேலைத்திட்டத்தைத் தாமே உருவாக்குவார்களென நம்புகிறோம்.

அத்தகைய வேலைத்திட்டம் எதுவாயிருக்க முடியும்? ஏகாதிபத்தியம் வெளியேறிய அதே கணத்தில் நடந்திருக்கவேண்டிய, ஆனால், மேலிடத்தார் நடத்தவும் மனமின்றி மறுக்கவும் துணிவின்றி காலம் கடத்திவரும் தமிழகப் பிரிவினை, சுயநிர்ணயவழி தமிழ் அரசு அமைத்தல் ஆகியவையே.

சில காங்கிரஸ்காரர்கள் நம்புவதைப்போன்று தமிழகப் பிரிவினை அவ்வளவு எளிதில் ஏற்பட்டுவிடுமென நம்மால் நம்ப முடியவில்லை. காரணமென்ன? "ஒரு மாகாணத்தை உருவாக்குங்கால் இன்னொரு மாகாணம் கஷ்டத்திற்கு உள்ளாகும்படி விட்டுவிடக்கூடாது" என்று இந்தியப் பார்லிமெண்டில் பண்டித நேரு கூறியிருக்கிறார். மொழிவழி மாகாணப் பிரிவினையை இந்தியாவில் அமுல் நடத்தினால், கஷ்டப்படும் மாகாணங்களில் முதல்தரமானது இந்தியாவின் குபேரர்களைக் கொண்ட குஜராத் மாகாணமேயாகும். இன்றைய பம்பாய் மாகாணத்தில், கன்னட நாட்டின் பகுதியும், பூனா, பம்பாய் நகரம் போன்ற மராட்டிய நாட்டின் பகுதிகளும் சேர்ந்திருக்கின்றன. எனவே, மொழிவழி மாகாணப் பிரிவினைப்படி பம்பாயின் தலைநகரமும், மற்றொரு சிறந்த நகரமாகிய பூனாவும் மராட்டிய நாட்டோடு சேரும். வட கன்னடம், சென்னை மாகாணத்திலுள்ள தென் கன்னடத்தோடு இணைக்கப்படும். எஞ்சியுள்ள குஜராத்தில் சிறு சிறு சமஸ்தானங்கள் ஒன்றை ஒன்று ஒட்டினாற்போல நிறைய இருக்கின்றன. அவை யனைத்தையும் ஒன்றாக்கி 'ராஜஸ்தான்' அமைக்கவேண்டுமென அதன் மக்கள் கோரு

கின்றனர். பம்பாய் பிரதமர் திரு. பி. ஜி. கேர் போன்ற செல்வாக்குள்ள தலைவர்களும் அதை ஆதரிக்கின்றனர். இதையும் அமுல் நடத்திய பிறகு எஞ்சியுள்ள குஜராத் பிரதேசம் மிகச் சிறியதாகவே இருக்கும். இந்த நிலையை கூர்ஜர அரசியல் தலைவர்கள் விரும்பவில்லை. ஆகவே, மூளை பலமும் மூலதன பலமும் கொண்டு மொழிவழிப் பிரிவினைக்கு முட்டுக்கட்டை போட்டுவருகின்றனர். ஆகவே, பிரிவினைக்காக பலமாகக் கிளர்ச்சி செய்ய நாம் திட்டமிடவேண்டும். மற்றும், சென்னை மாகாணத்தி லிருந்து ஆந்திராவை மட்டும் தனி நாடாக்கிவிட்டு, கன்னடத்தையும் கேரளத்தையும் காலம் குறிப்பிடாது தமிழ் நாட்டோடு சேர்த்துவைப்பதென்று மத்திய அர சாங்கத்தில் ஒரு திட்டம் உருவாகி வருவதாக அறிகிறோம்.

ஆந்திரரின் அவசரத்தையும், ஆத்திரத்தையும் காரண மாகக் காட்டி அவர்களுக்கு மட்டும் தனிநாடு தந்து மற்ற படி மொழிவழி மாகாணப் பிரிவினையை மேலும் தள் ளிப்போட முயல்கின்றனர். இதற்குத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் வாதிகள் இணங்குவார்களானால், இனி தமிழ கம் தனி நாடாவதோ பிற இனத்தவரின் பிடியிலிருந்து விடுபடுவதோ இந்தத் தலைமுறையில் இல்லை.

எனவே, கோவை காங்கிரஸ் மாநாட்டினர் மொழி வழி மாகாணப் பிரிவினை எளிதில் கிடைத்துவிடும் என்று எண்ணி தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது.

தமிழ் நாடு தனி நாடாகும் அதே நேரத்தில், சோஷ லிசத் தமிழ் அரசு அமைத்துக்கொள்ளும் உரிமை தமிழி னத்துக்கு இருக்க வேண்டுமென்று கோவை மாநாட்டினர் வற்புறுத்த வேண்டும். இந்தியாவின் பூகோள அமைப்பு காரணமாக மத்தியில் ஒரே அரசாங்கம் அமைய வேண் டும் என்பதே காங்கிரசின் கொள்கை. இதற்குக் காங்

கிரஸ் வாதிகள் கட்டுப்பட்டிருக்கின்றனர். ஆனால், இதை எப்படி அமைப்பது என்ற விஷயத்தில் அபிப் பிராயம் கூற மாகாண காங்கிரசுக்கு உரிமை உண்டு. அந்நிய நாட்டு அரசியல் உறவு, இந்தியாவின் பாதுகாப்பு, போக்குவரத்து ஆகியவற்றை மட்டும் மாகாணங்கள் இஷ்டத்தின்பேரில் விட்டுக்கொடுத்து இந்திய சமஷ்டியை அமைப்பதே நியாயமான முறை. அந்த சமஷ்டியும் சோஷலிச இந்தியாவில்தான் அமைய முடியும். ஆனால், இன்று நடப்பதென்ன? 'பலம் வாய்ந்த மத்திய சர்க்கார்' என்ற பெயரால் மகாணங்களின் உரிமைகள் பறிக்கப் பட்டுள்ளன. "தமிழகம் தனி மாகாணம், தமிழர் ஒரு தனி தேசீய இனம்" என்ற வரலாற்று உண்மையைக்கூட அர சியல் நிர்ணய மன்றத்தார் மறந்துவிட்டனர். அதில் கலந்துகொண்ட தமிழகத்துப் பிரதிநிதிகள்கூட வற் புறுத்தவில்லை. தமிழினத்துக்கு இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதிகளைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி தமிழகப் பிரிவினையை வற்புறுத்துவதோடு, சோஷலிசத் தமிழரசை அமைத்துக்கொள்ள தமிழினத்துக்கு உரிமை உண் டென்று தீர்மானம் செய்ய வேண்டும். இது காங்கிர ஸின் அடிப்படைக் கொள்கைக்கு முரண்பட்டதல்ல. காங்கிரஸ் வேண்டுவது ஏதேனும் ஒரு வகையில் ஐக்கிய இந்தியா. அதை நாம் ஏற்போம். அதே சமயத்தில், தமிழ்நாட்டின் உயிர் நாடியான உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாதென கூறிவிடுவோம். இதுதான் தேச பக்தி மார்க்கம். இதற்கு மாறுபட்ட ஏகாதிபத்திய —முதலாளித்துவ—பாசிஸப்பாதைகளில் அடியெடுத்து வைக்க முடியாதென்று அழுத்தந் திருத்தமாகத் தீர்மானிக் கும்படி கோவை மாநாட்டினரைக் கேட்டுக் கொள்ளு கிறோம்.

'தமிழ் முரசு' 15-12-1947.

# வருங்கால வேலைத் திட்டம்

இந்திய விடுதலைப் போரில் இரண்டறக் கலந்து வீரத்தோடு போரிட்டது தமிழகம். ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெற்ற பின்னர், தமிழகம் மீண்டும் தனி நாடாகுமா? அதில் தமிழரசு தோன்றுமா? அந்த அரசில் சோஷலிஸம் மணக்குமா? என்றெல்லாம் பல ஆண்டுகளாகவே எண்ணி எண்ணி ஏங்கினர் தமிழரில் சிலர். ஏன்? பலர் என்றாலும் பொருந்தும்.

இப்படி மக்களிடையே உலவி வந்த எண்ணங்கள் அனைத்தும், அரசியலுக்குரிய அத்தனை அங்கங்களும் நிரம்பப் பெற்று மக்கள் ஆமோதிப்பதற்குரிய பக்குவமான காலத்தில், இன்று "சோஷலிசத் தமிழரசு" என்ற கோஷமாக நாடெங்கும் பரவி வருகிறது. அதற்குக் காரணம் தமிழரசுக் கழகமே என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆம், தமிழரின் சுதந்தரக் கோரிக்கை கருவாகி, உருவாகி, உருவில் கலந்த உயிராகி இன்று ஓராண்டு குழவிப் பருவத்திலுள்ள கழகமாகக் காட்சியளிக்கிறது.

தமிழரசுக் கழகம், தனது ஓராண்டு பருவத்தில் அரிய பெரிய செயல்கள் பல ஆற்றியுள்ளது.

தெற்கே குமரி முனையில் 15 லட்சம் தமிழர்கள் தமிழ் நாட்டோடு சேர்ந்து புதிய தமிழகத்தை உருவாக்கப் புரட்சி செய்கின்றனர். சிறைக் கம்பிகளுக்குப் பின்னே நூற்றுக் கணக்கான இளஞ் 'சிங்கங்கள்' அடைப்பட்டுக்

கிடக்கின்றனர். அடக்கு முறைகளால் அங்குள்ள தமிழர்கள் அஞ்சிவிடவில்லை. ஆவேசங் கொண்டு சகோதர மலையாளிகளைப் பழிக்கவும் முனையவில்லை. ஆம்; பகைமை கலவாத உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய இன எழுச்சிக்கு அன்று முதல் இன்றுவரை துணைபுரிந்து வருவது தமிழரசுக் கழகமே யாகும்.

இனி, வடக்கெல்லையாகிய திருப்பதியைப்பற்றி தமிழரசுக் கழகம் தோன்றும் முன்பு சிந்தித்தவர்கள் மிகக் குறைவு. அதைப்பற்றி சிந்தித்த சிலரும் செயலாற்றத் துணிந்தார்களில்லை. ஆனால், இன்றைய நிலை அப்படியல்ல. தமிழரசுப் படை திருப்பதி சென்று திரும்பிய பிறகு ஆந்திரரின் பேராசை ஆட்டம் கண்டுவிட்டது. "இது ஆந்திர நாட்டின்மீது படையெடுத்தது போலாகும். விட்டேனா பார்! படையெடுப்புக்கு பதிலளித்தே தீருவேன்" என்கிறார் ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. என். ஜி. ரங்கா.

ஆந்திரக் கம்யூனிஸ்டுகளுக்கு தமிழரசுக் கழகத்தை நேரில் மிரட்டத் துணிவில்லை. திருப்பதியைத் திருப்பிக் கொடுக்கவும் மனமில்லை. எனவே, தமிழரசுக் கழகத்தின் வடக்கெல்லை மீட்சி இயக்கத்தை எதிர்க்க தமிழகக் கம்யூனிஸ்டுகளைப் பயன்படுத்துகின்றனர். ஆம், தட்டிக் கேட்க ஆளில்லாக் காரணத்தால் ஆந்திரத் தம்பி சண்டப் பிரசண்டம் செய்தான். இன்றோ, தட்டிக் கேட்கத் தமிழரசுக் கழகம் தோன்றிவிட்டது. எனவே, ஆந்திர ஆதிக்கவாதிகள் ஆத்திரம் கொள்கின்றனர்.

இது நிற்க, புதுக்கோட்டை அரசியல் போராட்டத்தில் சமரசம் காண அங்குள்ள சர்வ கட்சியினரும் மன்னரால் அழைக்கப்பட்டனர். ஆனால், புதுக்கோட்டைத் தமிழரசுக்கழகம் மட்டும் அழைக்கப்படவில்லை.

"தமிழகத்தின் ஒரு தாலுகாவாகக் கூடக் கருதப்படாத 1179 சதுர மைல்கள் கொண்ட துண்டு நிலம் ஒரு தனி யரசாம்! என்ன புதுமை! ஏகாதிபத்தியங்களெல்லாம் மண்ணில் மறையும் காலத்தில், இந்த எதேச்சாதிகார மன்னர்களுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவதா? முடியவே முடியாது. புதுக்கோட்டை நிலத்தை தமிழகத்தோடு இணைத்தே ஆக வேண்டும்".

சென்னைத் தமிழரசுக் கழக மாநாட்டின் தலைமை உரையிலிருந்து மேற்சொன்ன பகுதியை எடுத்துக்காட்டி, தமிழரசுக் கழகத்தினர் மன்னர் ஆட்சியை விரும்பாததால், மன்னர் கூட்டும் சமரச மாநாட்டில் அவர்களுக்கு இடம் தருவது முடியாதெனக் காரணம் காட்டப்பட்டது. ஆம்; புதுக்கோட்டை மன்னருக்கு தமிழரசுக் கழகம், புரட்சிக் கட்சியாகப் படுகிறது. இதற்காக நாம் பெருமை அடைகிறோம். மதியாதார் தலைவாசலில் நின்று மதிப்புப் பெற மனுப்போடாத புதுக்கோட்டை தமிழரசுக் கிளைக் கழகத்தாரையும் பாராட்டுகிறோம்.

கடல் கடந்த தமிழர் வாழும் மலேயா நாட்டில் வெளிவரும் தினசரிப் பத்திரிகைகளில் தமிழரசுக் கழகத்தின் கோரிக்கைகளுக்கு ஆதரவு திரண்டு வருகிறது. கழகத்தின் கிளைகள் கூட அமைந்து வருகின்றன. இத்தனை ஆண்டுகளிலும் இல்லாதவாறு இவ்வாண்டு அங்கு வ. உ. சி. யின் திருநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. அதன் காரணமென்ன? தமிழரசுக் கழகத்தின் செல்வாக்கு அங்கு காட்டாற்று வெள்ளம் போல் பெருகி வருவதே யாகும்.

தமிழகத்திலும் தமிழரசுக் கழகத்தைப் பற்றிய சலசலப்புகள் தோன்றிவிட்டன. எங்கே? ஆதிக்கவாதிகளின்

வட்டாரத்திலேதான். உண்மையான முற்போக்குவாதிகள், அவர் எந்தக் கட்சியினராயினும் தமிழரசுக் கழகத்திற்கு ஆதரவு காட்டியே வருகின்றனர்.

தமிழகத்தில் இதுவரை 60 கிளைக் கழகங்கள் அமைந்துவிட்டன. மாநில தமிழரசுக் கழக மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்து விட்டது. அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பத்திரிகைகள் மூலம் அகில இந்தியா வெங்கும் பரப்பப்பட்டுள்ளன. ஆனால், இவைமட்டும் போதா. தமிழகத்தின் விடுதலைக்கு—தமிழினத்தின் நல்வாழ்வுக்குப் பாடுபடும் தமிழரசுக் கழகத்தோடு எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். இது ஒரு தேசீய இயக்கமாகும். ஆகவே, தமிழக விடுதலைப் போரில்—பிற கட்சியினரும் கலக்கும்படி செய்ய தமிழரசுக் கழகத்தினரும் பாடுபட வேண்டும். கழகத்தின் வெற்றிக்கு அதுவே அடிப்படையாகும்.

இத்துறையில்,கடந்த ஓராண்டாக தமிழரசுக் கழகம் தனது முழுச் சக்தியையும் பயன்படுத்தியுள்ளது. சர்வ கட்சித் தலைவர்கள், குறிப்பாக முற்போக்குள்ள இளைஞர்கள் ஒரே மேடையில் தோன்றுவதென்ற நிலை இந்த ஓராண்டில் பன்முறை ஏற்பட்டதை தமிழர் நன்கறிவர். இதை மக்கள் வரவேற்றனரே யன்றி, வயிறெரியவில்லை. ஆனால், திட்டமின்றி, நாட்டை நடத்தும் திறனின்றி, ஆதிக்க புத்தி ஒன்றையே லட்சியமாகக் கொண்ட ஒரு சிலருக்கு இது ஆத்திரத்தை உண்டாக்கி விட்டது. எனவே, இந்த சர்வ கட்சி ஒற்றுமைய்ய—இளந் தலைவர்களின் ஐக்கிய முன்னணியை—ஓரளவேனும் சாத்தியமாக்கிக் காட்டிய தமிழரசுக் கழகத்தைத் தாக்க முனைந்துவிட்டனர். இதைக் கண்டு நாம் சிறிதும் ஐயம் கொள்ள

வில்லை. அந்தத் தாக்குதல்களோடு சேர்த்து, கட்சிகளின் தலைமைப் பீடங்கள், நம்முடைய கோரிக்கையைத் தாங்கியும் பேச வேண்டியிருக்கிற தல்லவா? அதற்காக மகிழ்ச்சியடைகிறோம்.

இத்தனை நாளும் கண்ணை மூடிக்கொண்டு, 'திராவிடர்' என்ற சொல்லை மட்டும் கூறி வந்தவர்கள், 'திராவிடர்' அல்லது 'தமிழர்' என்று கூற வேண்டிய கட்டாயம் இப்போது ஏற்பட்டுவிட்டது. 'திராவிட நாடு', 'திராவிட அரசு' என்றெல்லாம் ஒரு நாட்டுணர்வை, ஓரரசுத் தத்துவத்தைப் பரப்பி வந்தவர்கள், இன்று " மொழிவாரி நான்கு நாடுகள் கொண்டதே திராவிட நாடு. அந்த நான்கு நாடுகளுடைய தனித்தனி அரசுகளின் கூட்டரசே திராவிட அரசு" என்று விளக்கம் செய்ய வேண்டிய வேலை ஏற்பட்டுவிட்டது. ஆம்; வெறும் திராவிடமல்ல; ஐக்கியத் திராவிடம். இதுதான் திராவிடர் கழகத்தின் இன்றைய அரசியல் பேச்சு. அதற்கும் ஆட்சேபணை எழுப்பும்போது, "தமிழ் நாடே திராவிட நாடு" என்று விந்தியத்தை விட்டு வேங்கடத்திற்குத் தாவும் குரலைக் கேட்கிறோம். இந்தப் பெயரும் மாறி "தமிழ் நாடு தமிழ் நாடுதான்" என்று கூறும் நாளோ, அல்லது "பெயரைப் பற்றிச் சர்ச்சை வேண்டாம். தமிழகத்தின் விடுதலைக்கு ஒன்றுபட்டுழைப்போம்" என்று உறவு கொள்ளும் நாளோ அண்மையில் வரும் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

திராவிடர் கழகத் தலைமைப் பீடத்தின் ஆவேசமான தாக்குதல்களைக் கண்டு, தமிழரசுக் கழகத்து இளைஞர் பலர் சீற்றம் கொள்கின்றனர். அவர்களுக்கு ஒன்று கூறுகிறோம். திராவிடர் கழக வட்டாரத்தில் ஆழ்ந்து சிந்திக்கும் அன்பர் பலர் நமது கழகத்தின் கோரிக்கைகளுக்கு வெளிப்படையாக ஆதரவு காட்டிவருவதை

நினைப்பூட்டுகிறோம். கல்லூரி இளைஞர்கள், தமிழாய்ந்த புலவர்கள், அரசியல் அறிஞர்கள் பலரும் தமிழரசுக் கழகத்தின் கோரிக்கைகளுக்கு ஆதரவு காட்டுவதை மறந்துவிட வேண்டாம். இந்த ஆதரவு பெருகவேண்டுமானால்—நமது கழகத்தின் அடிப்படைக் கொள்கையாகிய சர்வ கட்சி ஒற்றுமையை வளர்க்க வேண்டுமானால்—நாம் தாக்குதல்களைக் கண்டு நிலை குலையாது, நேர் வழியில் செல்ல வேண்டும்.

தமிழரசுக் கழக அன்பர்களை — நாடெங்குமுள்ள கிளைக் கழகத்தினரை வேண்டுகிறோம். கடமையைச் செய்வோம். ஆம், முடிந்த இடத்தில் எல்லாக் கட்சியினருடனும் இணைந்து நின்று வேலை செய்வோம். முடியாத இடத்துப் பிரிந்து நின்று, தனிவழி சென்றேனும் தமிழ் நாட்டைத் தமிழருக்கு ஆக்குவோம். இன்று நம்மைத் தாக்குவோர், நாளை நம்மை ஆதரிப்போராக மாறப் போவது திண்ணம்.

தமிழரசுக் கழகத்தில் பணமூட்டைகள் இல்லை. பணமூட்டைகளை வருந்தி அழைக்க விருப்பமும் இல்லை. எனவே, நமது கழகத்தை நடத்தக் கையில் பொருளில்லை. என்றாலும், சோர்ந்துவிட வேண்டாம். காசாசையின்றி நாட்டுக்கு உழைக்கும் நல்லெண்ணமுடைய இளைஞர்கள் நம்மிடம் நிறைய உளர். பொருள் தேவைப்படுமிடத்து மக்களிடம் கையேந்துவோம். அதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

'தமிழ் முரசு' *1-1-1948.*

# ஆனந்தப் பொங்கல்

தமிழருக்கு இன்று பொங்கல் திருநாள். இது ஒரு சமயத்திற்கு மட்டும் உரிய திருநாளன்று; சமூகம் முழுவதற்கும் உரிய பெருநாள். சாதி, சமய வேற்றுமையின்றி தமிழராகப் பிறந்தோர் அனைவரும் கலந்து கொள்ளும் பெருமை படைத்தது இப் பொங்கல் நன்னாள். அதனாற்றான், 'தமிழ்த் திருநாள்' என்ற பெயரில் புலவர்கள் கொண்டாடி வந்த இந்நாளை, 'தமிழர் திருநாள்' என்ற பெயரில், படித்தவர் படியாதவர் ஆகிய எல்லோரும் கலந்து கொள்ளும் தேசியத் திருநாளாக மாற்றினர் தமிழரசுக் கழகத்தார்.

அதுமட்டுமல்ல; தமிழகத்தின் விடுதலை பற்றி, தமிழினத்தின் உரிமை பற்றி, தமிழ் மொழியின் உயர்வு பற்றி எல்லாத் தமிழர்களும் ஒன்று கூடிச் சிந்திக்கும் நாளாகவும் செய்து விட்டனர். பொங்கல் நாள் தமிழகத்து இல்லங்களில் புது அரிசி பொங்கும் நாள் மட்டுமல்ல; தமிழரின் உள்ளத்தில் புதுப்புது எண்ணங்கள் பொங்கி எழும் நாள். அந்த எண்ணங்களை இயக்கமாக மலர வைக்கத் திட்டமிடும் நாள் தமிழர் திருநாள்.

தமிழகம் அரசுரிமை பெறவில்லை; தமிழ் இனத்தின் அல்லலெல்லாம் தீரவில்லை. என்றாலும், ஆங்கில ஏகாதிபத்தியத்தை அகற்றிய பின்னர் நாம் கொண்டாடும் முதல் பொங்கல் விழா இதுவாதலால், இந்த ஆண்டு பொங்கல் விழாவுக்குத் தனிச் சிறப்புண்டு

மேற்கிலிருந்து ஆட்சி புரிந்த ஏகாதிபத்தியத்திற்கு முடிவு கட்டினோம். "இனி அடுத்தபடி என்ன?" என்று சிந்திக்கும் நாளாக இருக்கட்டும் இந்த ஆண்டு தமிழர் திருநாள்.

போகியன்று நள்ளிரவில், வீதிக்கு வீதி, முச்சந்தி தோறும் தமிழ் இளங்காளையர் மூட்டும் தீ போன்று, தமிழ் மக்களின் உள்ளத்தே உரிமைக் கனலை மூட்டுவோம் என்று ஒவ்வொரு ஆணும், பெண்ணும் உறுதி கொள்ளட்டும்!

போகித் தீயில் காட்டிச் சூடேற்றி நமது குழந்தை உலகம் கொட்டும் சிறு மேளம் தமிழரசுப் போர் முரசமாக முழங்கட்டும்!

இந்த ஆண்டு தமிழ் மக்களின் சிந்தனையில் வெறியேறி, செயலிலே வெற்றி கண்டால், அடுத்த ஆண்டு தைத் திங்கள் அதிகாலை நாம் சுதந்திரக் கதிரவனுக்குப் பொங்க லிடுவோம். அந்தப் பொங்கல்தான் **ஆனந்தப் பொங்கல்.**

மேற்சொன்ன சிந்தனைகளைத் தூண்டி செயலாற்ற வேண்டிக் கொண்டு, தமிழகத்தாருக்கும் தமிழகத்திற்கு வெளியே கடல் கடந்த நாடுகளிலே வாழும் எல்லாத் தமிழர்களுக்கும் நமது பொங்கல் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**வாழ்க தமிழ்மொழி!**
**வாழ்க தமிழினம்!**
**வாழ்க தமிழகம்!**

'தமிழ் முரசு' 15-1-1948.

# மக்கள் தலைவர் மறைந்தார்!

''காந்தியடிகள் கொல்லப்பட்டார்'' என்ற திடுக்கிடும் செய்தி 'முரசு' அச்சாகி முடிந்த பின்னர் கிடைத்தது.

இந்திய சமுதாயத்தின் வரலாற்றிலேயே இம்மாதிரி வேதனை தரும் செய்தி வேறொன்றில்லை. அதிலும் காந்தியடிகள் எந்த நாட்டினர் சுதந்திரமடைய, சுகவாழ்வு பெற உழைத்தாரோ, அதே நாட்டின் சதிகாரக் கூட்டம் ஒன்றின் தூண்டுதலால் கொல்லப்பட்டது உலகத்தின் முன்னர் இந்தியாவைத் தலைகுனியச் செய்துவிட்டது.

கடந்த முன்னூறு ஆண்டு அடிமைத்தனத்தில் நாம் அடைந்த வெட்கத்தையும் துக்கத்தையும் காந்தியடிகள் தோன்றிப் போக்கிவிட்டார். ஆனால், காந்தியடிகளைக் கொன்ற பாதகத்தால் நேர்ந்துள்ள வெட்கத்தையும் துக்கத்தையும் போக்குவார் யார்?

அண்ணல் காந்தியடிகள் கதிரவன் மறையும் அந்தி நேரத்தில் தமது கடிகாரத்தைப் பார்த்து, ''பொழுது போகிறது, போய் வருகிறேன்'' என்று சர்தார் பட்டேலிடம் கூறினார். ஆம்; வாழ்க்கைப் பொழுது சாய்ந்து விட்டது! அவரது கடிகாரம் காட்டிய நேரம், காந்தியடிகளின் மண்ணுலக வாழ்வுக்கு இறுதி நேரமாகிவிட்டது. நாடு வாழ்வதற்குப் பிரார்த்தனை செய்ய மேடையை நாடிச் சென்றார் அடிகளார். ஆனால், அந்த மேடையின் அருகில் அவர் வாழ்வைப் பறிக்க கொலை பாதகன் ஒருவன்

கூற்றுவன் வடிவில் நின்று அவர் உயிரை உண்டான். "தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்" என்றார் வள்ளுவர். ஆம், அந்தக் கூற்றுவன் அடிகளை நோக்கிக் கும்பிட்ட கரமே கொலைக்கரமானது!

டெல்லியில் வந்து குவியும் அகதிகளுக்கு ஆறுதல் கூற, அவர்கள் கண்ணீரைத் துடைத்துக் கவலையைப் போக்க, மதவெறி பிடித்த கூட்டத்திடமிருந்து அவர்களைப் பாதுகாக்க அண்ணல் காந்தி டெல்லியில் தங்கினார். ஆனால், அகதிகளின் காவலர் கொல்லப்பட்டதன் விளைவாக, இந்தியா முழுவதுமே அகதிகள் முகாம் ஆகிவிட்டது. நமக்கு ஆறுதல் கூறுவார் யார்?

காந்தியடிகளின் சேவை இல்லாவிடில் இந்தியா இந்நேரம் எந்த நிலையில் இருந்திருக்கும் என்பதை ஒரு கணம் எண்ணிப்பார்த்தால் நமது நெஞ்சு திடுக்கிடுகிறது. இனியும் அவரது சேவை தேவைப்பட்டிருக்கும் நேரத்தில் அவரை நாம் இழந்துவிட்டோம்.

காந்தியடிகளைக் கொன்ற சக்தி எது? மக்கள் சக்தியா? இல்லை; மதவெறி! மத வெறிக்கு மக்கள் தலைவர் மகாத்மா மனமொப்பவில்லை. சுதந்திர இந்தியாவை மத வெறியர் ஆளவிடாமல், மக்கள் சக்தி ஆளவேண்டுமென்பதே மகாத்மாவின் கருத்து. அவரது உபதேச மொழிகள், உண்ணாவிரதங்கள் அத்தனையும் இந்து சாம்ராஜ்யத்தை மீண்டும் காண விரும்பிய மதவெறியர்களின் எண்ணத்தில் மண்ணைறைவதாயின. எனவே, அண்ணலின் ஆவியைப் பலிகொண்டு, தமது ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள விரும்பினர் வெறியர்கள்.

இழக்க விரும்பாத, இழக்கக்கூடாத, இழந்தால் மீண்டும் பெற முடியாத பெருஞ் செல்வத்தை இழந்துவிட்,

டோம். இனி அழுது பயனில்லை. 'அடுத்தபடி என்ன?' என்பதைச் சிந்திப்பதே அறிவுடைமை. காந்தியடிகள் இருந்த இடத்திற்கு முற்றிலும் தகுதியுடைய ஒருவரைப் பெறுவது அரிது. என்றாலும், காந்தியடிகள் தாம் வாழ்ந்த நாளிலேயே, 'எனக்கு அடுத்த வாரிசு பண்டித நேருவே ஆவார்' என்று கூறியிருந்ததையொட்டி நேருவைத் தலைவராகக் கொள்வோம். அவர் காட்டிய ஆணை வழி கடமையைச் செய்வோம். அவரைச் சூழ்ந்துள்ள சுயநலச் சூழ்ச்சிக் கூட்டத்தாரால் அவருக்கும், இந்திய உப கண்டத்துக்கும் கேடுவராது காப்போம். இதுவே காந்தியடிகளின் ஆவி அமைதிபெற நாம் அளிக்கும் அன்புக் காணிக்கை.

வாழ்க காந்தியடிகளின் திருநாமம்!

*'தமிழ் முரசு' 1-2-1948*

# மத வெறியை மாய்ப்போம்!

காந்தியடிகளின் பொன்னுடல் செந்தீயில் வெந்து விட்டது. இந்திய மக்களின்—ஏன்?—மனித வர்க்கத்தின் ஆஸ்தி எனத் திகழ்ந்த ஐயனின் உடல் 'அஸ்தி' எனப் பெயர் பெற்றது. அதுவும் பல கூறுகளாகப் பங்கிடப் பெற்று, கடலில்—காவிரியில்—கங்கையில் கரைக்கப்பட்டு விட்டது.

கேட்டதைத் தரும் கற்பகத் தருவைக் கதையில் படித்தோம். கருணை பொழியும் காமதேனுவைக் காவியத்தில் பார்த்தோம். ஆனால், அரசியலிலே அற்புதம் செய்யும் கற்பகத் தருவாய், ஹரிஜன மக்களுக்கு அபயம் அளிக்கும் காமதேனுவாய் அண்ணல் காந்தி நம்மிடையே வாழ்ந்து வந்தார். 'வாழ்கின்றார்' எனக் களிப்படைந்தது உலகம். 'வாழ வேண்டும்' எனத் தவம் செய்தது இந்தியா. '125 ஆண்டுகள் வாழ்ந்தே தீருவேன்' என்று வாக்குறுதி தந்தார் மகாத்மா. ஆனால், மாபாதகன் ஒருவன் எல்லோரது நம்பிக்கையையும் தகர்த்துத் தவிடுபொடியாக்கிவிட்டான்.

ஏசுவைக் கொன்றதை ஏட்டில்தான் படித்தோம். சாக்ரட்டீஸ் மடிந்ததைச் சரித்திரத்தில்தான் பார்த்தோம். அந்தோ! 'காந்தியடிகள் கொல்லப்பட்டார்; கொலுத் தப்பட்டார்' என்ற கொடுமை மிக்க செய்திகளை, அவை நிகழ்ந்த மறுகணத்திலேயே நம் காதுகளால் கேட்டோம். அவர் பிரேதத்தை, அது எரிந்து கரிந்த அஸ்தியைக் கண்களால் பார்த்தோம். ஜன சமுத்திரத்தின் மத்தியில் நடமாடிக்கொண்டிருந்த உத்தமரின் உருவத்தை ஒரு பிடி

சாம்பலாக்கி ஜல சமுத்திரத்தில் கரைத்துவிட்டோம். நம்மைவிட துரதிருஷ்டசாலிகள் வேறு யாரிருப்பர்! மறக்க முயலுகிறோம்; முடியவில்லை. ஐயனின் திருமேனி கணத்திற்குக் கணம் நம் அகக் கண்முன் தோன்றுகிறது. கதியற்ற ஹரிஜன மக்களுக்கு நிதி தேடிய கைகள்; 'உப்பு வரியை உடைத்தே தீருவேன்' என்று தண்டி நோக்கி ஓடிய கால்கள்; பாட்டாளி மக்களுக்காகப் பரிந்து பேசிய வாய்; படைக்கஞ்சாப் பகைவனும் பார்த்தவுடனே நடுங்கும் வீரத்திருமார்பு; அறிவு, கருணை, அன்பு, அறம் அத்தனை நல்லியல்புகளும் கைகோத்துக் களிகூத்தாடும் திருமுகம். இவற்றை நாம் மறந்தாலும் நமது மனம் மறக்க மாட்டேனென்கின்றதே!

காந்தியடிகளை மறக்க முடியாது; மறக்கவும் கூடாது. என்றாலும், அவரது மறைவைப் பற்றிய கவலையை மறந்தே ஆகவேண்டும். அவர் நாட்டுக்கு விடுதலை தேடித் தந்தது நாம் வாழ்வதற்கேயொழிய வருந்துவதற்கல்ல. கவலைக்கு எவ்வளவுதான் காரணங்களிருப்பினும் அவற்றால் நாம் கடமையிலிருந்து தவறக்கூடாது.

அடிகளாரின் கொலைக்குப் பிறகு அரசாங்கம் மத ஸ்தாபனங்களை வேட்டையாட முனைந்துள்ளது. இதை நாம் மனமார வரவேற்கிறோம். என்றாலும், மத வெறியின் நாடி, நரம்புகள் எவை என்பதை அறிந்து அவற்றை அடியோடு அழித்தாலொழிய மத வெறியை மாய்ப்பதோ, மேலும் மேலும் மகாத்மாக்கள் கொலையாகாமல் தடுப்பதோ முடியாத காரியம்.

மகாத்மாவின் கொலைக்குப் பிறகு போலீசார் துப்பறிந்ததில், உலகமே திகைத்துப் போகக்கூடிய அளவுக்குச் சதிச் செயல்கள் உருவாகி வந்தது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய அளவில் திட்டமிட்ட

சதிச் செயல்கள் பல ஆண்டுகளாக அல்லாவிட்டாலும் பல மாதங்களாகவேனும் நடந்து வந்திருக்க வேண்டும். அப்படி இருந்தும், மத்திய அரசாங்கத்தாரின் உள் நாட்டிலாகா இதைக் கண்டுபிடிக்கத் தவறியதன் காரணமென்ன? இந்தியா முழுவதற்கும் படைதிரட்ட, அதற்குப் பயிற்சிதர, கொலைக் கருவிகளை வாங்கிக் குவித்து வைக்க இந்தச் சதிகாரக் கூட்டத்திற்கு எங்கிருந்து பணம் கிடைத்தது? பண மூட்டைகளின் தொடர்பு இவர்களுக்குத் திட்டமாக இருந்திருக்க வேண்டும். இவர்களுக்கு மறைமுகமாக உதவி செய்யும் பண மூட்டைகள் மீதும், "கடுமையான நடவடிக்கை" என்பதற்குச் சரியான அர்த்தம் என்னவோ, அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இன்றைய அரசாங்கத்தையே ஸ்தம்பிக்கச் செய்துவிடக்கூடிய அளவுக்கு சதிகாரர்கள் செல்வாக்குப் பெற்றிருக்கிறார்களோ என்றுகூட ஐயப்பட வேண்டியிருக்கிறது. உண்மை நிலை இதுவானாலும்கூட, நேரு அரசாங்கம் நாட்டிலுள்ள முற்போக்குச் சக்திகளின் துணையைப் பெற்றேனும் வகுப்புவாத சதி ஸ்தாபனங்களின் ஆணி வேரை அறுத்தெறியத் தயங்கக்கூடாது.

இடதுசாரிக் கட்சிகளும் கடந்த காலப் பூசல்களை மறந்துவிட்டு, கட்சி நலன்களை ஒதுக்கிவைத்து நேரு அரசாங்கத்திற்கு நிபந்தனையின்றியே துணைபுரிய வேண்டும். வகுப்புப் போராட்டத்தை மாய்க்காதவரையில், வர்க்க உணர்ச்சி வளர்ச்சி பெறுவது முடியாத காரியம்.

காங்கிரசின் பொறுப்பும் மகத்தானது. காங்கிரஸ் வலதுசாரித் தலைவர்கள் வகுப்புவாதிகளுக்கு வளைந்து கொடுப்பதும், இடதுசாரிகளைக் கண்ணை மூடிக்கொண்டு எதிர்ப்பதும்தான் 'தேசீயம்' என்று எண்ணிய பழங் காலப் போக்கை விட்டொழித்து, முற்போக்குச் சக்தி

களுடன் தொடர்புகொண்டு வகுப்புவாதத்தை அடியோடு தொலைத்தாக வேண்டும். இன்றைய அவசரப் பிரச்னை, இந்தியாவை வலதுசாரிகள் ஆள்வதா, இடதுசாரிகள் ஆள்வதா? என்பதல்ல. மக்கள் சக்தி ஆள்வதா, மத வெறி ஆள்வதா? என்பதேயாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சிலவற்றைத் தெளிவாக்க விரும்புகிறோம். வடநாட்டின் நிலைமை எது வானாலும், தமிழ் நாட்டில் இதுவரை மதவெறி இருந்த தில்லை. இனியும் இருக்கக்கூடாது. நாம் மதவெறியற்ற மக்களாய் வாழ்ந்து காந்தியடிகளின் பெருமையை வட இந்தியாவுக்கும், உலகத்துக்கும் உணர்த்த வேண்டும். நாம் முதலில் தமிழர்; இரண்டாவதாக இந்தியர். இதைத் தவிர வேறு எந்த சாதி, சமயப் பெயர்களையும் ஏற்பது தமிழினத்தைப் பிளவுபடுத்துவது போலாகும். சமயத்தையும் அச் சமய வழிப்பட்ட சடங்குகளையும் தனி மனிதனின் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டும். இதுதான் பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை நெறியாகும். காந்தியடிகள் பிறப்பால் குஜராத்தியாயினும், வாழ்க்கை நெறியால் தமிழராக வாழ்ந்தவர். வள்ளுவர் குறளோடு, வள்ளலார் அருட்பாவோடு காந்தீயத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் எவரும் இந்த உண்மையை ஏற்பது திண்ணம். எனவே, காந்தீய நெறியைக் கடைப்பிடித்து மதவெறியை எதிர்த்துப் போராடுவோமாக!

வள்ளுவர்—வள்ளலார் வழிவந்த காந்தியடிகளின் திருநாமம் வாழ்க!

*'தமிழ் முரசு' 15-2-1948*

# புதிய அரசியல்

சுதந்திர இந்தியாவின் 'அரசியல் நகல்' வெளியாகி விட்டது. வீரத் தியாகிகள், சட்ட அறிஞர்கள், சர்வ தேசச் செல்வாக்குள்ள அரசியல் தலைவர்கள், நிர்வாக நிபுணர்கள் ஆகிய அத்தனை பேரும் ஒருங்கு கூடி பல மாதங்களாக ஆலோசித்து, பல தேசத்து அரசியல் அமைப்புக்களையும் ஆராய்ந்து தயாரித்த அரசியல் நகல்தான் அது. எனவே, ஒவ்வொரு இந்தியனும் அதை மதிப்புடன் ஆராயக் கடமைப் பட்டுள்ளான். தமிழ் மக்களாகிய நாம், தமிழ் இனத்தின் வருங்கால வாழ்வுக்கு இந்தப் புதிய அரசியல் எப்படி வழி காட்டும்? சுக வாழ் விற்கு அழைத்துச் செல்லுமா? அல்லது சுரண்டல் பாதைக்குக் கூட்டிச் செல்லுமா? என்ற பொறுப்புடனும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

செக்கிழுத்த சிதம்பரனார் சிந்திய ரத்தத்தால்; அடிபட்டுச் செத்த குமரனின் உடலிலிருந்து ஆறெனப் பாய்ந்த செந்நீரால் எழுதப்பட்ட அரசியல் இது. அந்த வீரத் தியாகிகளின் விழுமிய சேவை இல்லை என்றால், ஆங்கில அரசு அகன்றிருக்குமா? இந்த அரசியல் நகல் தோன்றியிருக்குமா? இல்லை, இல்லை! ஆனால், அந்தத் தியாகிகளின் ரத்தத்தால் எழுதப்பட்ட இந்த அரசியல், அதே ரத்தக் கலப்புடைய தமிழ் இனத்தின் உரிமையை அபகரிக்காது அங்கீகரித்திருக்கிறதா? என்ற கண்ணோட் டத்துடன் எழுத்து எழுத்தாக, வரிவரியாக நாம் ஆராய்ந்து பார்த்தோம். நமது புறக் கண்கள் அரசியலின்

நகலைக் காண, அகக் கண்கள், முன்பு, அன்று அடைபட்ட இருட் சிறையின் சிறிய அறை, அந்த அறையில் அமர்ந்து எண்ணிய கம்பிகள், அந்தக் கம்பிகளைக் கடந்து தப்பாத வாறு எழுப்பியிருந்த உயர்ந்த மதில்கள், அந்த மதில் களுக்கு உள்ளும் புறமுமாக ஈட்டி பொருந்திய துப்பாக்கி கள் தாங்கி இங்குமங்குமாக நடமாடிய காவலர்கள், அந்தக் காவலுக்குள்ளே பட்ட மனவேதனை ஆகிய யாவும் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றித் தோன்றி மறைந்தன. இவ்வளவு துன்பங்களையும் மனம் கோணாது சகித்துக் கொள்வதற்கு அன்று எந்த தேச பக்தி காரணமாயிருந் ததோ, அதே தேசபக்தியுடன்தான் அரசியல் நகலை ஆராய்ந்தோம்.

"சுதந்திர இந்தியாவில் சோஷலிசத் தமிழரசு உண்டா?" என்பதே நமது ஆராய்ச்சியின் அடிப்படை. ஆம்; நமது இன்பத் தமிழகம்—நாம் பிறந்து வளர்ந்த தொட்டில்—நாம் ஓடி ஆடிய பூங்கா—நம் முன்னோரின் அஸ்தி கலந்த அருமை நிலம், இந்தத் தமிழ் நாடே அல்லவா? எனவே, அதன் சுதந்திர வாழ்வு, அது மொழி வழி பிரிந்து வாழும் உரிமை, ஒப்புக் கொள்ளப்பட்டனவா என்று ஆராய்ந்தோம். ஆனால், தமிழ் இனத்துக்குத் தனியரசு இல்லை என்பது தெளிவாகிவிட்டது.

இந்த அரசியல் நகல் மீது வயது வந்த வாக்காளர் களின் தீர்ப்பு கேட்கப்படுமா? இல்லை.

அல்லது, மாகாண சட்டசபைகளுக்கேனும் அனுப்பி அவர்களுடைய திருத்தம் அல்லது தீர்ப்புக் கோரப்படுமா? அதுவுமில்லை.

இந்த அரசியல் நகலே அரசியல் நிர்ணய மன்றத்தின் இறுதித் தீர்ப்பாம்! இதை எதிர்ப்பது ராஜாங்கத்

துரோகமாம்! இவ்வாறெல்லாம் கூட ஒன்றிரண்டு தமிழ்ப் பத்திரிகைகள் எழுதத் தொடங்கி விட்டன.

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணமும் 'தனி யரசு' போல் கருதப்பட்டு, அந்தத் 'தனியரசு'களின் கூட்டுறவு கொண்ட அரசாங்கமே 'இந்திய யூனியன்' என அரசியல் நகல் கூறுகிறது.

இதனால் மாகாணங்கள் தனி அரசுரிமை பெற்று விட்டதாக சிலர் மகிழலாம். வகுப்பு வெறியிலே, சுரண்டல் புத்தியிலே சிக்கி மதியிழக்காத எவரும் இந்தத் 'தனி அரசு' தத்துவத்தை சர்வதேசக் கண்கொண்டு ஆராய்ந்தால் அதனுடைய சாயம் வெளுத்துவிடும்.

பல 'தனியரசு'கள் கலந்ததே இந்திய யூனியன் என்றால், மாகாண சட்டசபைகளுக்கு அரசியல் நகலை அனுப்பி அவற்றின் கருத்தை அறிய மறுப்பதன் காரணம் என்ன? அமெரிக்காவில் சமஷ்டி அமைத்த போது அரசியல் நிர்ணய மன்றம், தான் தயாரித்த அரசியலை மாகாண மக்களின் ஆமோதிப்புக்கு அனுப்பியது. சில மாகாணங்கள் சமஷ்டியில் சேர மறுத்தன. அந்த மாகாணங்களை மத்திய சமஷ்டி மல்லுக்கு இழுக்க வில்லை. அவற்றின் தனித்து வாழும் உரிமையை ஒப்புக் கொண்டது. ஆனால், மத்திய சமஷ்டியில் சேர்வதால் தமது உரிமைகள் பறிபோகாவென்பதை நாளடைவில் உணர்ந்த அந்த மாகாணங்கள் தாமாகவே வலிய வந்து சமஷ்டியில் கலந்தன.

ஆஸ்திரேலியாவில் சமஷ்டி அமைத்தபோதும், அ. நி. மன்றம் தயாரித்த அரசியல் மசோதா மாகாணங்களிலுள்ள மக்களின் அபிப்பிராயத்துக்கு விடப்பட்டது. சில மாகாணங்கள் திருத்தங்கள் கோரின. பின்னர் சிறிது காலம் தவக்கப்பட்டாலும் கூடுமானவரையில் திருத்தங்

களை ஏற்று, மாகாணங்களின் ஐயங்களை அகற்றிய பின்னரே அங்கு சமஷ்டி அரசாங்கம் அமைக்கப்பட்டது.

இந்திய அரசியல் நகலின் பல்வேறு இடங்களில், அமெரிக்கா போன்ற நாடுகளின் அரசியல்கள் உவமானம் காட்டப்படுகின்றன. அவற்றிலிருந்தெல்லாம் ஆதிக்க வாதிகளுக்குச் சாதகமாக உவமானங்களைத் தேடித்தந்த சட்ட நிபுணர்கள், மேற்சொன்ன உண்மைகளை மட்டும் காணவில்லை போலும்! மொழிவழி மாகாணப் பிரிவினை பற்றி புதிய அரசியல் நகல் விஷயத்தைக் குழப்புகிறதே யொழிய, 'இந்தியா முழுவதுக்கும் மொழிவழி மாகாணப் பிரிவினை உடனடியாக அமுல் நடத்தப்படும்' என்று, தெளிவாக—திட்டவட்டமாகக் கூறவில்லை. அரசியல் நகலின் முன்னுரையில் ஆந்திரப் பிரிவினையைப் பற்றியே பிரஸ்தாபித் திருப்பதால், சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் அதற்குமேல் பிரிவினை செய்யப் போவதில்லை என்பது நிச்சயமாகிறது. ஆம்; ஆந்திரநாடு அமைந்த பிறகும் தமிழ்நாடு தனி நாடாகாது; அதில் தமிழரசு நடவாது. 'சென்னை மாகாணம்' என்ற கூண்டில் தமிழகம் அடைக்கப்பட்டிருக்கும். அங்கு மூன்று மொழிகள் வழங்குமாதலால், தமிழைப் பின் தள்ளி, ஆங்கிலமே அரசு செலுத்தும். புதிய அரசியலில் தமிழர் நிலை இதுதான்.

இது நிற்க, மாகாண கவர்னரை அந்தந்த மாகாண மக்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற ஜனநாயக முறைக்கு மாற்று முறை கூறப்பட்டுள்ளது. மாகாண சட்டசபைகள் நான்கு பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமாம். அந்த நான்கு பேரிலே ஒருவரை இந்தியக் குடியரசுத் தலைவர் கவர்னராக்குவாராம். மாகாண சட்டசபை, மக்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவதால்,

மாகாண கவர்னரையும் நேரடித் தேர்தலில் தேர்ந்தெடுத் தால் பல அரசியல் சிக்கல்கள் எழுமென்று புதிய அரசி யல் புலம்புகிறது. அந்தக் கவலை அதற்கிருக்குமானால், மாகாண சட்டசபையிலேயே, ஒரே அபேட்சகரையே இறுதியாகத் தேர்ந்தெடுப்பதற்கென்ன? அதை விட்டு கவர்னரை நியமிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் தருவானேன்? மாகாண சட்டசபை நான்கு பேரைத் தேர்ந்தெடுத்தால் அந்த நான்கு பேரில் கடைசி ஆளாக, சட்ட சபையின் எண்ணிக்கையில் சரிபாதி யல்லாத அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுபவரையும் குடி யரசுத் தலைவர் கவர்னர் ஆக்கி விடலாம். இது ஜன நாயகமல்ல.

'மாகாண கவர்னர்கள், அவர்கள் கவர்னர் பதவி வகிக்கும் அதே மாகாணத்தின் ஓட்டராக இருக்கவேண்டு மென்ற அவசியம் இல்லை' என்று அரசியல் நகல் கூறுகின் றது. இது ஒரு மாகாணத்தில் இன்னொரு மாகாணத்த வரை கவர்னராகப் புகுத்த இடம் தருவதாகும்.

கவர்னர் தேர்தல் விஷயத்தில் இவ்வளவு பந்தோ பஸ்து செய்யக் காரணம் என்ன? அதுவும் மக்களின் வாக்குரிமையைப் பறித்து, மாகாண சட்டசபையின் பெரும்பான்மைத் தீர்ப்பையும் மிதித்து, மாகாண வாசி அல்லாத ஒருவரை கவர்னராக்கும் வகையில் அரசியல் நிர்ணய மன்றத்தின் கருத்துச் சென்றது ஆச்சரியமாகவே இருக்கிறது.

மற்றும் அரசியல் நகலில், மாகாணங்களுக்கு இன் னின்ன அதிகாரங்கள் என்றும், யூனியன் அரசுக்கு இன் னின்ன அதிகாரங்கள் என்றும், அவை இரண்டும் சேர்ந்து நிர்வகிக்கும் அதிகாரங்கள் இன்னின்னவை என்றும் அரசியல் நிர்வாகப் பொறுப்புகளைப் பற்றிய

பகுதியில் கூறப்படுகிறது. தமிழராகிய நாம் விரும்பியது மத்திய அரசுக்கு மாகாணங்களே விரும்பித் தந்த அதிகாரங்கள் போக, இதர எல்லா அதிகாரங்களுடனும் கூடிய தனியரசு தமிழகத்தில் நடைபெற வேண்டும் என்பதாகும். ஆனால், மாகாண அரசுகளைத் 'தனியரசு' போல் கொள்வதாகக் கூறும் புதிய அரசியலில் புகுத்தப் பட்டுள்ள மேற்சொன்ன 'அதிகாரப் பங்கீடு' முறை நாம் விரும்பியதற்கு முற்றிலும் விரோதமானதாகும். இம்முறை மாகாண அரசாங்கங்களைப் பெயரளவில் தனி யரசாகவும், செயலளவில் மத்திய அரசாங்கம் ஆட்டி வைக்கிறபடி ஆடும் வெறும் நிர்வாக அங்கங்களாகவும் செய்து விடுமென்பதில் ஐயமில்லை. மாகாணங்களுக்குக் கொடுத்துவிட்ட விஷயங்களைக்கூட மத்திய அரசாங்கம் வேண்டும்போது எடுத்துக்கொள்ள புதிய அரசியலில் இடமிருக்கிறது. மத்திய யூனியனின் மேல்சபைக் கூட்டத் தில் ஆஜராகியுள்ள அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் ஓட்டளித்தால்**தான்** மாகாணங்களின் அதிகாரம் எதையும் மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம் என்று அரசியல் நகல் கூறுகிறது.

இந்த '**தான்**' என்ற இரண்டெழுத்தைக் கொண்டு மத்திய அரசாங்கம் மாகாணங்களின் அதிகாரங்களை எளிதில் பறிக்காதவாறு பாதுகாப்பளிப்பதாகப் பாசாங்கு செய்கிறது புதிய அரசியல். ஆனால், யூனியன் மேல்சபை எத்தகையது? கொழுத்த முதலாளிகளும் அவர்களுக்குப் பக்கமேளம் கொட்டும் பதவி வேட்டையாளரும் அடங் கிய 'பிரபுக்கள் சபை'யே யல்லவா? சுரண்டல் கொள் கைக்குச் சாதகமாக "இந்தியர் ஒரே இனம்" என்று கோஷமிடும் இந்தக் கூட்டத்தார், மாகாணங்களின் உரிமைக்கு மதிப்புத் தருவார்களா? குறிப்பாக, தென் னிந்திய மாகாணங்களின் ஈனக்குரல் அவர்கள் திருவுள்

ளங்களில் புகுமா? ஒரு போதும் இல்லை. மாகாணங்களின் உரிமைகளை மத்திய யூனியன் திரும்ப எடுத்துக்கொள்ளும் விஷயத்தில், மக்கள் சபைக்கேனும் உரிமை அளிக்காததன் காரணமென்ன?

மத்திய யூனியனுக்குரிய பொறுப்புகளில், அவசியம் நேர்ந்தால் எதையேனும் மகாணங்கள் திருப்பிக் கேட்பதற்கு இடமே இல்லை. சுருங்கச் சொன்னால், புதிய அரசியலின்படி மாகாணங்களின் நிலைமை இதுதான் :

மத்திய யூனியன் தனக்கே உள்ள பொறுப்பில் ஏக போக ஆதிக்கம் செலுத்தும்.

தானும் மாகாணமும் சேர்ந்து நிர்வகிக்கும் பொறுப்பிலும் சாம, பேத, தான முறைகளைக் கையாண்டு காரியத்தைச் சாதிக்கும்.

மாகாணங்களுக்கென்று விடப்பட்டுள்ள அதிகாரங்களையும் மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்வதற்கும், அவற்றில் தலையிட்டுத் தாக்கீது பிறப்பிப்பதற்கும் இந்தச் சட்டத்தில் மூன்று சாதனங்கள் இருக்கின்றன.

(1) யூனியன் மேல்சபை அங்கத்தினரில் மூன்றில் இரண்டு பங்கினர் ஓட்டுகள். (2) அபாய நிலைமை என்று காரணம் காட்டி மாகாண நிர்வாகத்தைக் கலைத்துவிட்டு கவர்னரே எடுத்துக்கொள்ளுதல் (3) அவர் மூலம் இந்தியக் குடியரசுத் தலைவர், மாகாணம் முழுவதும் இந்திய யூனியனின் நேரடியான நிர்வாகத்தின் கீழ் வந்து விட்டதாகக் கூறுதல். இம் மூன்றும் இறுதியாகக் கையாளக் கூடிய தண்ட முறைகளாகும்.

இவ்வாறு சாம, பேத, தான, தண்டம் என்று வடமொழி காட்டிய நான்கு வழிகளையும் கொண்டு மாகாணத்தின் மீது ஆதிக்கம் செலுத்த மத்திய அரசுக்கு இடமிருக்

கிறபோது, மாகாணங்கள் "தனியரசு போன்றவை" என்று கூறுவதில் அர்த்தமில்லை.

உண்மையைச் சொன்னால், காங்கிரஸ் மேலிடத்தார் அன்னிய அரசை அகற்றிவிட்டு, அந்தப் பீடத்தில் தாங்கள் இருந்துகொண்டு அதைவிட ஒரு நல்ல அரசை நமக்கு வழங்கி யிருக்கிறார்கள். ஆனால், நமது வரலாற்று வழி நமக்குச் சொந்த அரசை அமைத்துத் தரவில்லை நாமே அமைத்துக் கொள்ளும் சுய நிர்ணய உரிமையையும் நமக்கு வழங்கவில்லை.

என்றாலும், நாம் சோர்ந்துவிடக் காரணமில்லை. மக்களின் சக்தியில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். எந்த அரசியலையும் சட்ட ரீதியாகவும், சமாதானமான முறையிலும் மாற்றுவதற்கு மக்கள் சக்திக்கு உரிமையுண்டு. திறமையும் உண்டு. எனவே, தமிழ் மக்களாகிய நாம் முன்னூறு ஆண்டு அடிமைத் தனத்திற்குப் பிறகு இன்று நமக்குக் கிடைத்துள்ள புதிய அரசியலை, இனி நமக்குக் கிடைக்க வேண்டிய சோஷலிசத் தமிழ்க் குடியரசை அடைவதற்கான அடிப்படையாகக் கொண்டு, தமிழினத்தின் பிறப்புரிமையான சோஷலிசத் தமிழரசை அடைய ஒன்றுபட்டுப் பாடுபடுவோமாக!

'தமிழ் முரசு' 1-3-1948.

# முஸ்லிம்களின் சிந்தனைக்கு

முஸ்லிம்களைப் பற்றிய பிரச்சினை தமிழரசு இயக்கத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். எனவே, அவ்விஷயத்தில், நாம் தமிழரசுக் கழகத்தின் கொள்கையை விளக்கிக் கூறக் கடமைப் பட்டிருக்கிறோம்.

தமிழ் நாட்டில் வாழும் முஸ்லிம்களின் மொத்த எண்ணிக்கை பன்னிரெண்டேகால் லட்சம். இவர்கள் அனைவரும் தமிழினத்தார் என்பது தமிழரசுக் கழகத்தின் கொள்கை. சைவம், வைணவம், பௌத்தம், சமணம் எனப் பல்வேறு சமயங்கள் தமிழ் இனத்தின் உட்பகுதிகளாக இருப்பனபோல், இஸ்லாமும் ஒரு பகுதியாகும். எனவே, சமயத்தை மட்டும் காட்டி தமிழ் நாட்டு முஸ்லிம்கள் தமிழர் அல்லர் என்று சொல்ல முடியாது.

முஸ்லிம்கள் தனித்த "தேசீய இனத்தவர்" என்று கூறப்படுவதை நாம் எப்போதும் ஏற்றதில்லை. இனி மேலும் ஏற்க முடியாது.

இஸ்லாம் தமிழ் நாட்டில் தோன்றிய மதமல்ல. அயல் நாட்டிலிருந்து இங்கு குடியேறியவர்கள் கொண்டு வந்த மதமேயாகும். அப்படிக் குடியேறியவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிறு குழுவினரே. ஆனால், நாளடைவில் சைவம், வைணவம் போன்ற உள்நாட்டுச் சமயங்களைச் சேர்ந்த ஏராளமான தமிழ் மக்கள் இஸ்லாத்தைத் தழுவி அதைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கையைப் பெருக்கினர். அவர்கள் இஸ்லாத்தைத்

தழுவிய பின்னரும் தமிழ்நாட்டில்தான் வாழ்கின்றனர். இஸ்லாத்தைத் தழுவியதால் தாய்மொழியாகிய தமிழோடு இன்னொரு மொழியையும் கற்றார்கள். அதுதான் உருது மொழி. சைவ, வைணவ சமயங்களைச் சார்ந்தொழுகும் தமிழர்களைப் போலல்லாமல், இஸ்லாத்தைப் பின்பற்றும் தமிழர்கள் தங்கள் சமயத்திற்கென தனிமொழி வைத்துக் கொண்டுள்ளனர் என்பதைத் தவிர, முஸ்லிம் அல்லாத தமிழருக்கும், முஸ்லிம் தமிழருக்கும் உள்ள வேற்றுமை ஒன்றுமே இல்லை. தமிழரானோர், ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதம் மாறுவதனாலேயே இனம் மாறிவிடாது. சமய மொழி என்ற காரணத்தால் உருதுவை கற்றதனாலேயே, தமிழ் மொழி தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கு அன்னியமொழியாகி விடாது—தாய்மொழிதான்.

வடநாட்டு நிலைமை எதுவானாலும் தமிழ் நாட்டில் இஸ்லாம் சமயத்துக்கும் பிற சைவ, வைணவ சமயங்களுக்கும் எத்தகைய பகைமையும் முன்பு இருந்ததில்லை.

'முருகா, முருகா, முருகா' என்று பாடிய பாரதியாரே, 'அல்லா, அல்லா, அல்லா' என்று ஆர்வத்தோடு பாடி இருப்பது தமிழ் முஸ்லிம்கள் அறியாததல்ல.

முஸ்லிம் அல்லாதாரில் படித்தவருள்படத் தமிழர் பலர் நாகூர் ஆண்டவனைத் தொழுவதும், முஸ்லிம்களுக்கே உரிய மொகரம் பண்டிகையைக் கொண்டாடுவதும் நாம் கண்ணெதிரே கண்டுவரும் காட்சிகள். எனவே, வடக்கேயுள்ள சமயப் பகைமை தமிழ் நாட்டிற்கு உடன்பாடல்ல.

தமிழ் முஸ்லிம்கள் தங்கள் சமயப் பண்புகளைக் காப்பதற்காக ஸ்தாபன ரீதியாகப் பாடுபடுவதை நாம் எதிர்க்கவில்லை. அந்த உரிமை எதிர்காலத் தமிழகத்திலும் இருக்குமென்று தமிழினத்தின் சார்பாக உறுதி

கூறுகின்றோம். ஆனால், சமூக, அரசியல், பொருளாதாரத் துறைகளில் தனித்து நிற்பதோ, மதவழி தனி அரசியல் கட்சி வைத்துக்கொண்டு தமிழினத்தோடு தொடர்பற்று வாழ்வதோ, தமிழை அன்னியமொழியாக எண்ணிப் புறக்கணிப்பதோ கூடாதென்றுதான் கூறுகிறோம். அப்படிச் செய்வதால் முஸ்லிம்களில் சில கனதனவான்கள் நன்மை பெறலாம். ஆனால், பொதுவாக முஸ்லிம் பொது மக்களுக்கு அதனால் துளியளவும் நன்மை இல்லை; அதோடு தீமை விளையவும் ஏதுவாகின்றன.

எனவே, தமிழ்நாட்டு முஸ்லிம்கள் தமிழ் இனத்தின் உரிமையில்—தமிழ் நாட்டின் நன்மையில் கருத்துச் செலுத்துவாராக! தமிழ்நாட்டைத் தனி நாடாக்கி, அதில் சோஷலிசத் தமிழரசை அமைக்கப் பாடுபடுவாராக !!

இந்த நேரத்தில் முஸ்லிம் அல்லாத தமிழருக்கும் சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம். தமிழகத்தின் வரலாற்றிலே, அரசியலில் சமயம் கலந்த நிலை எப்போதும் இருந்ததில்லை. இங்கே வந்து குடியேறியவர்களில் சிலரும், படையெடுத்து நாடாண்டவர்களும், சமய நெறியை சாத்திரத்தின் உண்மையை, ஆதிக்கக் கருவிகளாகக்கொண்டு அவற்றை அரசியலில் புகுத்தினர். அன்றுதான் தமிழர் அரசு அழிந்தது; ஆண்மை குலைந்தது; அடிமை வாழ்வு பிறந்தது. எனவே, மீண்டும் தமிழுணர்வு கொண்டு தமிழரசு கோரும் இந்நாளில் அரசியலிலிருந்து சமய உணர்வை அப்புறப்படுத்தவும், வடக்கேயிருந்து நமக்குக் கைகாட்டிக் கட்டளையிடும் வகுப்புவாத வெறியர்களின் வார்த்தைகளைப் புறக்கணிக்கவும் முஸ்லிம்களுக்கு, முஸ்லிமல்லாத தமிழர்கள் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும்.

வடக்கே பாண்டவருக்கும் கௌரவருக்கும் நடந்த பாரதப் போரில் நம்நாட்டு வேந்தர், எந்த ஒரு தரப்பின

ருக்காகவும் படை அனுப்பியதில்லை. அதை வடநாட்டினரின் குடும்பச் சண்டையாகக் கருதி நடுநிலைமை வகித்தனர். ஆனால், தமிழருக்கே உரிய—தஞ்சமென்றவருக்கு அஞ்சேலென்று அருள் புரியும்—பெருங்குணத்தால் பாரதப் போரின் கொடுமைக்கு ஆளாகிச் சோறின்றித் தவித்த வடநாட்டு அகதிகளுக்குப் பெருஞ்சோறு தந்து ஆதரித்தனர். இதை,

> " ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
> பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய் "

என்ற புறநானூற்று (2-ம் பாடல்) வரிகள் உணர்த்தும். நம் முன்னோர் சென்ற அதே வழியிலேயே நாமும் நடப்போமாக!

வடநாட்டில் நிகழ்ந்ததைப் போன்று முஸ்லிம்கள் தமிழகத்திற்கு நாடு பிடிக்கும் நோக்கத்துடன் படையெடுத்து வந்தவர்களல்லர். பஞ்சத்தில் அடிபட்டு தஞ்சம் புகுந்தவரே பெரும்பாலோர். ஏனையோர் வாணிபத்திற்காக வந்தார்கள். எனவே, பண்டைத் தமிழர்கள் தமிழகத்தில் குடியேறிய அராபிய முஸ்லிம்களை எதிர்த்துச் சண்டையிடவில்லை. அவர்களை வரவேற்று, தமிழகத்தின் வளத்தில் பங்கும்தந்து வாழ்வளித்தனர். இதை நாம் மறந்து விடக்கூடாது. குடியேறிய முஸ்லிம்களும் உள்நாட்டுத் தமிழர்களுக்கு எத்தகைய கொடுமையும் செய்ததில்லை. வடநாட்டில் நிகழ்ந்த கொடுஞ் செயல்களைத் தமிழ் நாட்டு முஸ்லிம்கள் கடைப்பிடித்ததில்லை. உள்நாட்டுச் சைவ, வைணவ மதங்களில் புகுந்திருந்த வைதீகத்தின் கொடுமையால் ஒடுக்கப்பட்ட மக்கள் இஸ்லாத்தில் சேர்ந்தனர். ஆம்; நம்மிடையே இருக்கும் தீண்டாமைக் கொடுமைதான் இஸ்லாம், கிறிஸ்துவ மதங்களின் வளர்ச்சிக்குக் காரணம். எனவே, எந்த வகையிலும் நமக்கு

அன்னியரல்லாத, எந்தக் காலத்திலும் நமக்குத் தீங்கு இழைத்தறியாத தமிழ் முஸ்லிம்களைப் பகைப்பதோ, அவர்களைத் தமிழரல்லாத அன்னியராக நினைப்பதோ கூடாது. தமிழ் முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாத தமிழர்கள் ஆகிய எல்லோரையும் வேண்டுகிறோம். மதவெறியை மறந்து "எல்லோரும் ஓரினம்" என்ற உணர்ச்சியோடு ஒன்றுபடுவோமாக!

-'தமிழ் முரசு' *15-3-1948.*

# புரட்சித் திருநாள்

மே மாத முதல் நாளை உலகமெங்குமுள்ள பாட்டாளி மக்கள் தங்கள் வர்க்கத்தின் உரிமைத் திருநாளாகக் கொண்டாடுகின்றனர். சுரண்டும் வர்க்கத்தைத் திருப்பித் தாக்கும் திறமை, சுரண்டப்படும் வர்க்கத்திற்கும் உண்டு என்பதை 1886–மே முதல் தேதியன்றுதான் அமெரிக்கத் தொழிலாளிகள் உலகமெங்குமுள்ள முதலாளி வர்க்கத்திற்கு உணர்த்தி வைத்தனர். முதலாளி வர்க்கத்தின் கொள்ளையை, அதற்குத் துணை புரியும் அரசாங்கத்தின் கொடுங்கோலை மக்கள் தாங்க முடியாது. தற்காப்புக்காக நடத்திய போராட்டம்தான் மே தினப் புரட்சி.

இயற்கை வகுத்தது ஒரு நாளைக்கு இருபத்துநான்கு மணி நேரம். அதில் உறங்கப் புகும் நேரம் தவிர எஞ்சிய நேரம் முழுவதிலும் உழைத்தே தீரவேண்டுமென்று கட்டளையிட்டது முதலாளி வர்க்கம். சட்டத்தின் மூலம் அரண் கட்டித் தந்தது அதிகார வர்க்கம். இந்த அநீதிக்கு அடங்கி வாழ்வதுதான் ஆண்டவனுக்குத் திருப்தி என சாமியின் பெயரால்—சமயத்தின் பெயரால் சகிப்புத் தன்மையை போதித்தது புரோகித வர்க்கம். அனாதிகாலம் தொட்டே ஆதிக்க வாதிகளின் கொடுமைகள் எத்தனை யுண்டோ அத்தனைக்கும் அடங்கி வாழ்ந்து வந்ததுதான் பாட்டாளி வர்க்கத்தின் வரலாறு.

இந்த மானங்கெட்ட வரலாற்றைத் தீயிலிட்டுப் பொசுக்கி எட்டு மணிநேரம் உழைப்பு, எட்டு மணிநேரம் பொழுது போக்கு, எட்டு மணி நேர ஓய்வு என்று திட்ட

மிட்டு, அந்தத் திட்டத்தைச் சட்டமாக்கவேண்டுமென ஆட்சியாளருடன் போராடி, பல வீரத் தியாகிகளைப் பலிகொடுத்த நாள்தான்—அவர்கள் செந்நீர் அமெரிக்க வீதிகளிலே ஆறெனப் பெருகி ஓடிய நாள்தான் மே திரு நாள். எனவே, மே திருநாள் என்பது, உண்டுகளிக்கும் பண்டிகை நாட்கள் போன்றதல்ல. உடைமையாளர் கூட்டத்துக்கு எதிராக "உலகத்தொழிலாளிகளே, ஒன்று படுங்கள்" என்று உழைப்பாளி மக்களுக்கு அழைப்பு விடுக்கும் நாள்.

சமயமுள படிக்கெல்லாம் பொய் கூறி அறங் கொன்ற சுமடர்களைச் சாய்த்தே தீருவதெனக் கோடானுகோடிப் பாட்டாளிகள் தங்கள் கைகளை உயர்த்தி சபதம் செய்த நாள்தான் மே திருநாள். உழைப்பாளி வர்க்கத்தைப் பல கூறுகளாக்கி, ஒன்றுக் கொன்று எதிரிடையாக சண்டையிடத் தூண்டிய தத்து வங்களுக்கெல்லாம் தொழிலாளி வர்க்கம் தலைமுழுக்குப் போட்ட நாள் மே திருநாள்.

தமிழர் தனி இனம் என்றாலும், தமிழரது பண்பாடு உலக மக்களின் உறவுக்கு வழிகாட்டும் உயர்வானதாகும். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுப் பாடல் தமிழ் இனத்தாரின் சர்வதேசிய கோஷமாகும்.

தமிழினத்தின் பண்பென்பது, சாதிக்கு ஒரு நீதி சொல்லும் சழக்கர்களின் போதனையன்று. ஒருவன் இருந்துண்பதும் இன்னொருவன் இரந்து திரிவதும், அவனவன் பாவ—புண்ணியங்களின் பலன் என்ற பங்கப் பட்ட வாதம் சங்க இலக்கியங்களுக்கு ஒத்ததன்று. எனவே, தமிழ்ப் பண்பு என்பது பூர்ஷ்வாக்களின் பண் பல்ல. தமிழ்க் கலைகள் என்பது அவர்தம் சுரண்டல்

கருவிகள் அல்ல: பாட்டாளி மக்களின் உரிமைக்குத் துணை செய்யும் பெருமை மிக்க சாதனங்களாகும்.

'பகுத்துண்டு பல்லுயிரோம்புவதே' தமிழரது பொருளாதாரக் கொள்கை. தன்னுயிர் போல மன்னுயிரையும் எண்ணுவதே தமிழினத்தின் சமய நெறி. ஏற்றமும் இழிவுமின்றி மக்கள் 'எல்லோரும் ஓர் குலம்' என்ற சமதர்ம சமுதாயமே தமிழர்களது லட்சிய உலகம். இத்தகைய உயர்ந்த நெறிகளைக் கொண்ட தமிழினத்தார் தனி இனத்தாராய் விளங்குவதால், சர்வ தேசீய உறவுக்கோ உழைப்பாளி வர்க்கத்தின் உரிமைப் போருக்கே கேடொன்றும் நேராது என்பதே நமது திடமான நம்பிக்கை. எனவே, மே திருநாளாகிய பொன்னுளில் தமிழகத்துப் பாட்டாளி மக்கள், பொருளாதார வழிப்பட்ட வர்க்க உணர்ச்சியோடு, மொழிவழிப் பட்ட இன உணர்ச்சியும் கொள்ளுமாறு வேண்டுகின்றேம்; கொள்வார்களென்றும் நம்புகிறேம்.

மே திருநாள், தொழில் வளர்ச்சிக்கு எதிரான நாளன்று; அதற்கு மாருக, தொழிலாளர்களுக்கு, உழைப்புக்கும் தேவைக்கும் ஏற்ற ஊதியம் கொடுப்பதன் மூலம்தான்—அவர்கள் உடம்பைக் காக்குமளவுக்கு ஓய்வு கொடுப்பதன் மூலம்தான்—தொழில்கள் வளர்ச்சி பெறும்; உற்பத்தி பெருகும் என்ற உண்மைகளை ஊராள்வோருக்கு உணர்த்தி வைக்கும் நாளாகவே கருதவேண்டும். அமெரிக்கப் புரட்சியிலிருந்து, தமிழ்நாட்டுப் பாட்டாளி மக்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமென்ன? பலாத்காரமன்று; உழைப்பாளி மக்கள் ஒன்றுபட்டால் அவர்களை வெற்றி கொள்ளும் சக்தி இந்த உலகத்தில் இல்லை என்ற உண்மையே யாகும். எந்த ஒரு இயக்கத்திற்கும் சரி; வெற்றி தரும் கருவி பலாத்கார

மன்று. அந்த இயக்கத்தை நடத்தும் மக்களின் கட்டுப் பாடேயாகும். ஒரு இயக்கத்தில் பலாத்காரம் கலப்பதும் கலக்காததும், அது நடக்கும் காலம், அதை நடத்தும் நாட்டின் பண்பாடு ஆகியவற்றைப் பொறுத்ததே யாகும். மே திருநாளில், அமெரிக்கப் புரட்சியை நினைவுக்குக் கொண்டுவரும்போது. அங்கு நடந்த பலாத்காரத்தை மறந்து, அந்த நாட்டுப் பாட்டாளி மக்கள் கற்றுத் தந்த ஒற்றுமையையே கவனத்தில் கொள்ள வேண்டும்.

மே திருநாள், ஒரு வர்க்கத்தாரை இன்னொரு வர்க் கத்தார் சுரண்டும் கொடுமைக்கு எதிராகக் கொண்டாடும் நாள் மட்டுமன்று; ஒரு சாதியினரை இன்னொரு சாதியார் ஏய்த்துப் பிழைப்பதையும் எதிர்க்கும் திருநாள்—ஒரு மொழியினரை இன்னொரு மொழியினர் அடக்கி ஆளும் அநீதியையும் ஆட்சேபிக்கும் திருநாள்.

ஆம்; மனித சமுதாயத்தில் புகுந்துள்ள கொடுமை கள் எத்தனையுண்டோ, அத்தனையையும் எதிர்த்துப் போரிட ஆற்றல்தரும் நாளாகவே, நாம் மே திருநாளைக் கருதுகிறோம்.

விண்ணிடிக்கும் கோபுரங்களைக் கொண்ட கோயில் கள் நிறைந்தது தமிழகம். பட்டாடை உடுத்தி பண்புடன் வாழ்ந்த நாளில் கட்டி வைத்த கோயில்கள்; பொன்னும் மணியும் கொழித்த காலத்தில் விட்டு வைத்த மானியங் கள். முத்தமிழ் வளர்க்கும் கர்த்தர்களாக விளங்குவார் கள் என்ற நம்பிக்கையால் அமர்த்தப்பட்ட புரோகி தர்கள். அத்தனையும் இன்று என்ன ஆயின?

கோயிலுக்கு வெளியே, கட்டத் துணியற்ற மக்கள்—பாலுக்கழும் பச்சிளம் குழவிகள்—கண்ணற்றவராய்க் காட்சி அளிக்கும் கபோதிகள் — காலற்று வீழ்ந்து கிடக்கும் முடவர்கள் ஆகிய அத்தனை பேரும் குடிக்கக்

கஞ்சியின்றி, ஒரு காசுக்காகக் கையேந்திக் கதறி அழும் கோரக் காட்சிகள்!

அதே நேரத்தில், அதே கோயிலில் கடவுளுக்குச் சாற்றுவது பட்டாடை; அவர் வீதிவலம் வருவது வெள்ளி விமானம்; அவரது தனயர்கள் ஏறி வருவது தங்கப் பல்லக்கு. அவரது தலையை அலங்கரிப்பது விலை மதிக்க வொண்ணாத வைரமுடி. அவரது மேனி குளிர வீசுவது வெண்சாமரம். ஆம்! கோயிலுக்குள்ளே உண்டு களிப் போரின் வேத கோஷம். கோபுர வாசலுக்கு வெளியே உணவற்றுத் தவிப்போரின் வேதனை கோஷம். இந்தத் தீமையை ஒழித்து ஆலயங்களையெல்லாம் அறம் வளர்க் கும் நிலையங்களாகவும் மாற்றவேண்டும்.

இடம் விட்டு இடம் பெயர்வது, மாகாணம் விட்டு மாகாணம் செல்வது மக்கள் நெறி. இதைக் கண்டு துக்கப்படுவதும், தூஷித்துப் பேசுவதும் மாகாண வெறி. ஆனால், குடியேறும் மாகாணத்தைத் தாயகமாகக்கொள் ளாமல், அங்கு குடியிருக்கும் மக்களோடு குலவி வாழாமல், அம் மாகாணத்தின் சொத்தைச் சுரண்டுவதற் கென்றே குடியேறுவதும், கல்விச் சாலைகள் கடவுளர் கோயில்கள் ஆகியவையெல்லாம் தங்களுக்கென தனியே நிர்மாணித்துக் கொண்டு தனித்து வாழ்வதும் தவிர்க்கப் பட்டாலொழிய ஒரு மாகாணத்தவருக்கு எதிராக இன் னொரு மாகாணத்தார் போர்க்கோலம் கொள்வதைத் தவிர்க்க முடியாது.

சுரண்டலை ஒழிக்கும் மே தினத்தில்—சுய நலத்தை எதிர்க்கும் புரட்சித் திருநாளில், தமிழகத்தில் உள்ள இடதுசாரிக் கட்சியினருக்குத் தமிழினத்தின் சார்பாக சிலவற்றைத் தெரிவித்துக் கொள்கிறோம்:

உழைப்புரிமை காரணமாக தமிழகத்துத் தொழி

லாளி உலகப் பாட்டாளி வர்க்கத்தோடு ஒன்றுபட்டாலும், பிறப்பால், பேசும் மொழியால், வாழும் தாயகத்தால், மொழி வழி வரலாற்றால் தமிழகத்தைத் தனி நாடாக்கி, அதில் தன்னரசு செலுத்தும் உரிமை பெற்று இருக்கிறான். அப்படியே இந்தியாவில் உள்ள பிற இனத்துத் தொழிலாளி மக்களும் தனியரசு கோருவது தவிர்க்க முடியாததாகும். எனவே, தமிழகத்து இடதுசாரிக் கட்சிகள் தமிழ் நாட்டுப் பாட்டாளி மக்களைப் புரட்சிப் பாதைக்கு ஒரு முகமாகக் கொண்டு செல்ல வேண்டுமானால், 'சோஷலிசத் தமிழ்க் குடியரசு'க் கோரிக்கையை அங்கீகரித்தாக வேண்டும். அங்கீகரித்த பிறகும் அந்தக் கோரிக்கையை வண்டிக்குப் பின் பாரக் கல்லாக வைக்காமல், கட்சியின் வளர்ச்சிக்கான கோஷமாகக் கொள்ளாமல் முன்னணிப் பிரச்சினையாகச் செய்ய வேண்டும்.

மொழிவழி இன உணர்ச்சியை எதிர்த்து முறியடித்து விடலாம் என்று இடதுசாரிக் கட்சிகள் எண்ணுமானால், அது படுதோல்விக்குப் பந்தயம் கட்டியது போலாகும். சாதி, சமய, கட்சி வேற்றுமைகள் அனைத்தையும் புரட்சித் தீயில் போட்டுப் பொசுக்கி புது உலகம் கண்ட சோவியத் ரஷ்யாவில்கூட, மொழிவழி இன வேற்றுமை அங்கீகரிக்கப்பட்டு ஒவ்வொரு இனத்துக்கும் சமஷ்டியிலிருந்து பிரிந்து போகும் உரிமையுடன் தனித்தனி குடியரசு நடத்த உரிமை தரப்பட்டுள்ளது. இதை இங்குள்ள இடதுசாரிக் கட்சிகளுக்கு நினைப்பூட்டுகிறோம். பாரதி கூறியதுபோல், 'ஆகா' வென்றெழுந்த ருஷ்யப் புரட்சி போன்ற பொது உடைமைப் புரட்சியாலும்கூட அழிக்க முடியாத மொழி வழிப்பட்ட இன உணர்ச்சியை இந்திய நாட்டில் அழித்துவிடலாம் என நினைப்பது பலிக்க முடியாத பகற்கனவேயாகும். இந்தியாவில் சுரண்டலை

ஒழிக்கவேண்டுமானல், இந்திய முதலாளித்துவத்திற்கு எதிராகக் கிளம்பும் எந்த விதமான இயக்கத்தையும், அது நாட்டின் நலத்தில் நாட்டம் உள்ளவர்களால் நடத்தப்படும்வரை, வர்க்கப் போராட்டத்திற்கு எதிரிடையாக இல்லாதவரை அதை அங்கீகரிப்பதுதான் இடதுசாரியினரின் கடமையாக இருக்க வேண்டும்.

எனவே, மே திருநாளில் தமிழகத்துப் பாட்டாளி மக்கள் 'முதலாளித்துவம் ஒழிக' என்று கோஷமிட்டால் மட்டும் போதாது. தமிழகத்தில் 'சோஷலிசக் குடியரசு' அமைய வேண்டுமென்றும் ஆரவாரம் செய்யவேண்டும்.

இந்தியாவில், ஒரு மாகாணத்தை இன்னொரு மாகாணத்தை இன்னொரு மாகாணம் சுரண்டும் நிலைமையை ஒழிக்க எல்லா இடதுசாரிக் கட்சிகளும் ஒன்றுபட்டுத் திட்டமிட்டு வேலை செய்யாதவரை, இந்தியப் பாட்டாளி மக்களை முதலாளித்துவ எதிர்ப்பு முகாமுக்குள் வெற்றிகரமாகக் கொண்டு வருவது முடியாத காரியம். மொழிவழிப்பட்ட இன உரிமைக் கோரிக்கைக்கு இடதுசாரிக் கட்சிகள் ஆதரவளிக்காவிட்டால், முதலாளித்துவ வரிசையில் பின்னணியிலுள்ள மாகாணங்களின் முதலாளிகள் அந்தக் கோரிக்கையைப் பயன்படுத்திக்கொண்டு, தங்கள் சுரண்டும் வேலையைத் தொடர்ந்து நடத்துவார்கள் என்பதை இடது சாரிகளுக்கு நினைவூட்டுகிறோம்.

மற்ற இடதுசாரிக் கட்சிகளின் நிலைமை எதுவானாலும், தமிழரசுக் கழகத்தின் நிலைமை தெளிவாக இருக்கின்றது. ஆங்கிலேயர் அகன்ற பின்பும் தமிழினத்தார் அரசுரிமை பெறவில்லை என்ற செய்தியை 'தேசீயம்' என்ற திரையைக் கிழித்து உலகப் பாட்டாளி மக்களின் பார்வைக்குக் கொண்டு வருகிறோம்,

பூகோளத்தின் ஒருமையைக் காட்டி, மொழிவழி இனங்களின் உரிமை மறுக்கப்படுகின்றது என்பதை உலகத் தொழிலாளி வர்க்கத்திற்குத் தெள்ளத் தெளிய உணர்த்துகிறோம்.

பாட்டாளி மக்களின் உரிமைப் போரிலே உயிர்ப்பலி யான உத்தமத் தியாகிகளின் அத்தனை பேருக்கும் அவர் கள் எந்த நாட்டினராயினும், எந்த இனத்தவராயினும் அவர்களுக்கு நமது வீர வணக்கத்தைச் செலுத்துகிறோம்.

தமிழினத்தார் உரிமையைப் பெற்ற பின்னர் கடமை யைச் செய்வதில் மனித வர்க்கத்தோடு கை கோர்த்து நிற் பார்கள் என்று உலகத் தொழிலாளர்களுக்கு உறுதி கூறு கின்றோம்.

வாழ்க பாட்டாளி வர்க்கம்!
வருக சோஷலிசத் தமிழரசு!

—'தமிழ் முரசு' மே 1948

# வீரபாண்டியனை மறவாதீர்!

இந்திய விடுதலைப் போர் பற்றிய வரலாற்றை வெளியிட டில்லி அரசாங்கம் தீர்மானித்துள்ளது. செய்திகளைச் சேகரிக்கத் தனிக்குழு ஒன்றையும் அமைத்து, அந்தக் குழுவினர் கோரும் தகவல்களைக் கொடுத்து உதவுமாறும் மாகாணங்களுக்கு ஆணை அனுப்பியிருக்கிறது. பொதுவாக இம் முயற்சி வரவேற்கத் தக்கதே. என்றாலும், இந்த விஷயத்தில் டில்லி அரசாங்கத்தினர் ஒரு தவறான அடிப்படையின் மீது வேலையைத் துவக்க விருப்பதைக் கண்டிக்காமல் இருப்பதற்கில்லை.

வடக்கே 1857-ல் நிகழ்ந்த சிப்பாய்க் கிளர்ச்சியிலிருந்து 1947 ஆகஸ்டு 15 வரை நிகழ்ந்துள்ள சம்பவங்களை மட்டுமே தொகுக்க வேண்டுமென்பது டில்லி அரசாங்கத்தினர் கட்டளை. இந்திய விடுதலைப் போரின் ஆரம்ப கட்டம் சிப்பாய்க் கிளர்ச்சிதான் என்பது அவர்கள் கருத்து. ஆனால், உண்மை வரலாறு இதற்கு நேர் மாறானது. 1797 முதல் 1801 வரை சுமார் 4 ஆண்டுகள் தெற்கே வீரபாண்டியக் கட்டபொம்மன் வெள்ளையருக்கு எதிராக நடத்திய புரட்சிதான் இந்திய விடுதலைப் போரின் ஆரம்பக் கட்டமாகும். இந்தப் புரட்சிக்கு 60 ஆண்டுகளுக்குப் பிறகுதான், வடக்கே சிப்பாய்கள் புரட்சி நிகழ்ந்தது. ஆகவே, பாஞ்சை வேந்தன் கட்டபொம்மன் நடத்திய வீரம் மிக்க புரட்சியிலிருந்துதான் இந்திய விடுதலைப் போரின் வரலாறு எழுதப்பட வேண்டும்,

உண்மை வரலாறு இதுவாக, டில்லி அரசாங்கத்தினர் சிப்பாய்ப் புரட்சியை விடுதலைப் போரின் முதல் கட்டமாகக் கொண்டதை மானமுள்ள எந்தத் தமிழனும் பொறுத்துக்கொள்ளமாட்டான். நான்கு ஆண்டுகள் நடந்தது பாஞ்சைப் புரட்சி. பத்தே மாதங்களில் ஓய்ந்துவிட்டது சிப்பாய்ப் புரட்சி! சிப்பாய்ப் புரட்சியை நாம் குறைத்துக்கூற விரும்பவில்லை. அந்தப் புரட்சியில் ஆவி நீத்த வீரர்கள் அத்தனை பேருக்கும் நாம் வணக்கம் செலுத்துகிறோம். ஆனால், வீரமும் தியாகமும் தங்களிடமிருந்துதான் துவங்குகிறது — தங்களிடமிருந்துதான் துவங்கவும் முடியும் என்றெண்ணும் இறுமாப்பை நாம் எதிர்க்காமல் இருப்பதற்கில்லை.

வரலாற்றில் இதுவரை தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குக் கணக்கில்லை. இந்தியாவின் பழங்குடி மக்கள் தமிழரே என்பதை ஆராய்ச்சி உலகம் அறியும். அறியாதவர்களுக்கு கால்டுவெல், கிரீயர்சன் போன்ற மேனாட்டறிஞர்கள் எழுதியுள்ள ஏடுகள் அறிவிக்கும். ஆனால், இந்திய வரலாற்றுப் புத்தகத்தின் முதல் ஏட்டில் தமிழர் வரலாறு இடம் பெறவில்லை. காரணம் என்ன? வரலாற்று ஆசிரியர்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கத் திட்டமிட்டதுதான். இந்திய விடுதலைப் போரைப் பற்றிய வரலாற்றிலேனும் இந்த அநீதி இடம் பெறாமல் இருக்கவேண்டும். டில்லி அரசாங்கத்தினர் தமிழ் இனத்தவருக்கு—தமிழ் இனத்தின் தனிப்பெரும் தியாகியான வீரபாண்டியனின் புகழை மறைக்கும் எண்ணம் உடையவர்கள் என்று நாம் கூறவில்லை. வீரபாண்டியன் வரலாற்றை அறியாததன் காரணமாகவே, இந்தப் பிழை நேர்ந்திருக்கலாம். உண்மை அறியாத மேலிடத்து ஆட்சியினருக்கு, அறிவிக்க வேண்டிய பொறுப்பு தமிழருடையு

தாகும். தமிழ் மக்கள் ஆங்காங்கு கூட்டங்கள் போட்டு, டில்லி அரசாங்கத்தின் முடிவை மாற்றுமாறு தீர்மானிக்க வேண்டும். வீரபாண்டியன் நிகழ்த்திய பாஞ்சைப் புரட்சியை ஆரம்பமாகக் கொண்டே விடுதலைப் போரின் வரலாறு துவக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும். தீர்மானம் பின்வருமாறு அமையலாம்:

"இந்திய விடுதலைப் போர் வரலாற்றை வெளியிடுவதென இந்திய அரசாங்கம் செய்துள்ள முடிவை தமிழ் மக்களடங்கிய இக்கூட்டம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது. ஆனால், வடக்கே நடந்த சிப்பாய்ப் புரட்சிக்கு 60 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாட்டில் வீரபாண்டியக் கட்டபொம்மன் நிகழ்த்திய ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சியை ஆரம்பமாகக் கொண்டே வரலாற்றைத் துவக்க வேண்டும் என்று மத்திய அரசினரை வற்புறுத்துகிறது."

தமிழ் மக்கள் தனித்தனியாகக்கூட சென்னை முதலமைச்சருக்கும், இந்தியப் பிரதமர், ஜனாதிபதி ஆகியோருக்கும் இது பற்றிக் கடிதங்கள் எழுதலாம்.

உறங்கினால் உரிமை பறி போகும். பெருமை மறைக்கப்படும். 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்றபடி, 'வடக்கே வகுத்ததே வரலாறு' என்று உலகம் நம்பி விடும். தமிழர்களே, எச்சரிக்கை!

—'தமிழ் முரசு' மே. 1950.

# இலங்கையில் தமிழ் விழா

1951 ஏப்ரல் 29, 30, மே 1 ஆகிய மூன்று நாட்களில், யாழ்ப்பாணத்தில் தமிழ் விழா மிகச் சிறப்பாக நடை பெற்றிருக்கிறது. இலங்கை, இந்தியாவோடு தொடர் பற்ற தனியரசு நாடாயினும், யாழ்ப்பாணம் உள்பட அதன் வடபகுதி மாகாணங்களில் பெரும்பாலும் தமிழர் களே வாழுகின்றனர். மற்றும் பண்டை நாளில் இலங் கைக்கும் இந்தியத் தமிழகத்துக்கும் நெருங்கிய கலாச் சாரத் தொடர்பு இருந்ததாக அறிகிறோம். இந்தியத் தமிழகத்தில், சேரன் செங்குட்டுவன் வீரக் கண்ணகிக்கு விழா நடத்திய போது, இலங்கை வேந்தன் கயவாகுவும் வந்திருந்ததாகச் சிலப்பதிகாரத்தால் அறிகிறோம். சிலப் பதிகார காலத்திற்குப் பிறகு, மீண்டும் ஸ்தாபன ரீதியாக, இலங்கைக்கும் இந்தியத் தமிழகத்திற்கும் கலாச்சாரத் தொடர்பு ஏற்படுவதற்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழா முதல் முயற்சியாகும். இம் முயற்சியில் ஈடு பட்டுள்ள தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். இலங்கைத் தமிழரோடு மட்டுமல்லா மல், மலேயா — பர்மா — இந்தோனேஷியா — தென்னுப் பிரிக்கா போன்ற பிற நாடுகளிலுள்ள தமிழர்களோடும், இந்தியத் தமிழர்களுக்கு கலாச்சாரத் தொடர்பு ஏற்பட தமிழ் வளர்ச்சிக் கழகம் பாடுபட வேண்டும்.

பல்வேறு சமயத்தவரும் தத்தம் சமய சாத்திரங்களை தமிழிலே யாத்தனர். வைணவருக்கு நாலாயிரப் பிர பந்தமும், சைவருக்கு தேவாரம்—திருவாசகமும், சமண

ருக்கு சிந்தாமணியும், பௌத்தருக்கு மணிமேகலையும், கிறிஸ்தவருக்கு தேம்பாவணியும், இஸ்லாமியருக்கு சீராப் புராணமும் சமய சாத்திரங்கள் மட்டுமல்ல; அவர்களது தமிழ்ப் பற்றையும் புலமையையும் விளக்கும் இலக்கியங்களுமாகும்.

இலங்கைத் தமிழ் விழாவில், ஆண்–பெண் என்ற பால் வேற்றுமையின்றி, இந்து–முஸ்லிம்–கிறிஸ்தவர் என்ற சமய வேற்றுமையின்றி, தமிழ் ஆர்வமுள்ள எல்லோரும் கலந்து கொண்டிருப்பது போற்றற்குரிய செய்தியாகும். ஆம்: தமிழ், சமய வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டது. தமிழ் இனத்தவரிலே சைவர், வைணவர், சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் ஆகிய எல்லா சமயத்தவரும் உண்டு. ஆயினும் தமிழ், எந்த ஒரு சமயத்தினருக்கும் தனி உடைமையன்று. தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டுவிட்ட தமிழ் இனத்தவர் எல்லோருக்குமே தமிழ் தாய் மொழியாகும். ஆம்: இனம் வேறு; சமயம் வேறு. இதை மறத்தல் கூடாது.

ஆகவே, யாழ்ப்பாணத்தில் மதத்தால் வேறுபட்ட புலவர்களெல்லாம் இன உணர்ச்சியால் ஒன்று பட்டு ஒரே மேடையில் தோன்றி தமிழின் சிறப்பை எடுத்தோதிய காட்சி என்றென்றும் மறக்க முடியாததாகும்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் செய்துள்ள பணிகள் பலப்பல. அவற்றுள் தலையாயது–தமிழரின் பாராட்டுதலுக்குரியது–தமிழுக்கென கலைக் களஞ்சியம் தயாரிக்க முயல்வதாகும். இந்திய மொழிகள் பலவற்றுள்ளும் தமிழ் மொழியில்தான் முதன் முதலில் கலைக் களஞ்சியம் தயாரிக்கும் முயற்சி நடைபெறுகிறது. இது தமிழர் பெருமைப் படக்கூடிய செயலாகும். ஆனால், இதுவரை செய்துள்ள பணிகளுக்காக தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரைப் பாராட்டும்போது, இன்னும் செய்யவேண்டிய பணிகளை நினைப்பூட்டுவதும் நமது கடமையாகும்.

பாரதம், ராமாயணம் போன்ற வடமொழிக் காவியங்களை–அக்காவியங்கள் கூறும் செய்திகளை தமிழர் ஒவ்

வொருவரும் அறிவர். ஆனால், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ்க் காவியங்களின் சிறப்பை வட நாட்டார் அறிந்திலர். வடமொழிப் பண்டிதர்கள்கூட இதற்கு விதி விலக்கல்லர். மிதிலையில் பிறந்த சீதையின் சிறப்பை தமிழர் போற்றுகின்றனர். ஆனால், பூம்'புகாரிற்' பிறந்த கண்ணகியின் புரட்சியை வட நாட்டார் அறிந்திலர்.

காளிதாசனின் புலமையை, சிவாஜியின் வீரத்தை, தயானந்தரின் சீர்திருத்தத்தைப் போற்றிப் புகழாத தமிழர்கள் இல்லை. ஆனால், கவியரசர் கம்பரை, மாவீரன் செங்குட்டுவனை, சீர்திருத்தச் செம்மல் வள்ளலாரை வட நாட்டார் போற்றுவதில்லை. இந்த நிலை மாற வேண்டும். இந்தியா ஒன்று என்று சொல்லி விட்டால் மட்டும் போதாது. இந்திய மக்களிடையே ஒன்றுபட்ட உள்ளம் ஏற்படுவதற்கும் வழி செய்ய வேண்டும்.

வட மொழிக் காவியங்களையும், அக்காவியங்களின் வழிப்பட்ட கருத்துக்களையும் தென்னாட்டில் பரப்புவதற்கு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வட மொழியில் புலவர்கள் பாடுபட்டு வந்திருக்கின்றனர். அதுபோன்று தமிழ் இலக்கியங்களின் பெருமையை—தமிழரின் பண்பாட்டை வட நாட்டாரிடையே பரப்புவதற்கு தமிழ்ப் புலவர்கள் எவரும் முயற்சி செய்ததில்லை. குமரகுருபர சுவாமிகள் அம்முயற்சியை துவக்கி வைத்ததுண்டு. ஆனால், அவருக்குப் பின் அம்முயற்சி தொடர்ந்து நடை பெறாமல் அழிந்தே போயிற்று. தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரேனும் அம்முயற்சியில் ஈடுபடுவாராக.

வெறும் இலக்கிய நயங்களை எடுத்துரைப்பதாலோ. காலஞ்சென்ற கவிஞர்களைப் பாராட்டுவதாலோ, தமிழ் வளர்ந்து விடாது. காதல்—வீரம்—கடவுள்நெறி ஆகிய துறைகளில் சிறப்புப் பெற்றிருப்பது போலவே, அரசியல் —விஞ்ஞானம்—தொழில் ஆகிய துறைகளிலும் தமிழ் மறுமலர்ச்சியடைய வேண்டும். ஜனநாயகம், சர்வாதிகாரம் ஆகியவை பற்றிய நுட்பங்களையும், இந்த இரண்டு

த்துவங்களுக் கிடையேயுள்ள வேற்றுமைகளையும் தெளிவாக விளக்கிக் கூறும் அரசியல் நூற்கள் தமிழிலே இல்லை.

சோஷலிசம், கம்யூனிஸம் போன்ற 'இஸம்'களின் நுட்பங்கள், அந்த 'இஸம்'களை யொட்டிய இயக்கங்களால் விளையும் பலன்கள் பற்றிய பொருளாதார சாத்திரங்கள் தமிழில் வரவேண்டும். என்ஜினீயரிங், மருத்துவம், சட்டம் போன்ற தொழில் வழிப்பட்ட நவீன சாத்திரங்களும் தமிழில் இல்லை. இத்தகைய சாத்திர நூற்களை எழுதித் தருவோருக்குப் பரிசுகள் வழங்குவோம் என்று பறைசாற்றுவதாலேயே நூற்கள் குவிந்து விடாது. தமிழில் வரும் விஞ்ஞான நூல்கள் போதிய அளவுக்கு விலை போகவும் வழி செய்ய வேண்டும். அப்போதுதான் விஞ்ஞானத் தொழிலியல் ஞானமுடைய எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் பிறக்கும். மக்கள் வாங்கிப் படிப்பதற்கான சூழ்நிலை இல்லாதபோது, வெறும் பரிசுகளுக்காக மட்டும் விஞ்ஞான நூல்கள் வெளிவரா.

தமிழகம் தனியரசு மாகாணமாகும் போதுதான் தமிழ் அரசு மொழியாகும். அப்போதுதான் அரசியல்—பொருளாதார—விஞ்ஞான சாத்திரங்கள் தமிழில் வெளிவருதற்கான வசதியும் வாய்ப்பும் ஏற்படும். அரசு மொழியாகாமல் அடிமை நிலையில் வைத்துக்கொண்டே தமிழுக்கு விழா நடத்துவதால் போதிய பயன் கிட்டாது. ஆம்; தமிழின் பெருமையை விளம்பரப் படுத்தினால் மட்டும் போதாது; அதன் உரிமையை அடைவதற்கும் பாடுபட வேண்டும். தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் அத்துறையிலும் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்களாக!

*தமிழ் முரசு' மே, ஜூன் 1951.*

இன்ப நிலையம்
மயிலாப்பூர் — சென்னை-4.